வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P.1632

# ஈழநாடு

Eelanadu வார மலர்

விலை ரூ. 30/=




Email : news@eelanadu.lk மலர் : 07 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 82 பக்கங்கள் : 16

# வடக்கில் மணல் மாபியாக்களை கட்டுப்படுத்த கூட்டு நடவடிக்கை

## ஆளுநர் செயலகத்தில் நடந்த கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடக்கு மாகாணத்தில் கட்டுக்கடங்காமல் தொடரும் மணல் கடத்தல் நடவடிக்கைகளை விரைந்து கட்டுப்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த அவசர விசேட கூட்டத்தில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடக்கு ஆளுநர் செயலகத்தில் நடந்த கூட்டத்தின் போதே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. 15




## ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தமிழரசுக் கட்சியுடன் முக்கிய பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 29

இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நல்லூர் பகுதியில் உள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தில் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை காலை குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், ஜன நாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் இணைத் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.ரவீந்திரா (வேந்தன்), முரு 15



## கொடிகாமத்தில் சட்ட விரோத மணல் கடத்தல் உழவு இயந்திரம் மோதி பொலீஸ் அதிகாரி பலி!

### மற்றொருவருக்குக் காயம்

கொடிகாமம், மார்ச் 29

சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட உழவு இயந்திரத்தை மறிக்க முற்பட்ட பொலீஸ் அதிகாரி ஒருவர், அவ் உழவு இயந்திரத்தில் நசியுண்டு மரணமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - கொடிகாமம் பகுதியில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சட்ட விரோத மணல் கடத்தல் குறித்து கொடிகாமம் பொலீசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில், தென்மராட்சி - கெற்பேலி, வீரபத்திரர் கோவிலடிக்குச் சென்ற பொலீஸ் அதிகாரிகள் இருவர், சந்தேகத்துக்கிடமான உழவு இயந்திரத்தை வழிமறித்துள்ளனர்.

பொலீஸாரின் அறிவுறுத்தலை 15

## ரஷ்ய வெளிவிவகார பிரதி அமைச்சர் நாளை மறுதினம் கொழும்பு வருகிறார்

கொழும்பு, மார்ச் 29

இலங்கை மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், ரஷ்யாவின் வெளிவிவகார பிரதி அமைச்சர் ஆண்ட்ரே ருடென்கோ நாளை மறுதினம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜய



மொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

கொழும்பில் நடைபெறவுள்ள இலங்கை - ரஷ்யா இடையிலான 11ஆவது இருதரப்பு அரசியல் ஆலோசனை கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவி வரும் 15

## விவசாயிகள், மீனவர்களுக்கு விசேட ஏற்பாட்டில் எரிபொருள்

கொழும்பு, மார்ச் 29

விவசாயம், மீன்பிடி மற்றும் ஏனைய வாகனமற்ற எரிபொருள் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தேசிய அடையாள அட்டை இலக்கத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய கியூ.ஆர். முறைமையொன்றை அறிமுகப்படுத்த இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ஏ.எஸ். டி எஸ். ராஜகருணா இது குறித்து கருத்து தெரிவிக்கையில்- 15

## 2ஆம் இடத்தில் இலங்கை!


கொழும்பு, மார்ச் 29

உலகின் மிகக் குறைந்த கட்டுப்படியாகக்கூடிய வீட்டுச் சந்தைகளைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளதாக தி எக்கோனமிஸ்ட் இதழின் புதிய அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆசியா முழுவதும் அதிகரித்து வரும் வீட்டுவசதி நெருக்கடி குறித்து இந்த ஆய்வு விரிவாக விளக்கியுள்ளது.

வேகமான நகரமயமாக்கல் மற்றும் குறைந்த விலையிலான வீடுகளுக்கு நிலவும் கடும் பற்றாக்குறை ஆகியவையே இந்த நிலைக்கு முக்கிய 15

## சந்திரிகா-நளிந்த விசேட சந்திப்பு



கொழும்பு, மார்ச் 29

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் சுகாதார அமைச்சர் 15

## எரிபொருள் விலை திருத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது!

கொழும்பு, மார்ச் 29

மார்ச் மாத இறுதியில், எரிபொருள் விலைத் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த மாத இறுதியில், எரிபொருள் விலை திருத்தம் எதுவும் இருக்காது என்பதை என்னால் 15

## கொக்குத்தொடுவாயில் அத்துமீறி உப்பளம் உரிய நடவடிக்கை உடனே எடுக்கவேண்டும்

### மகாவலி பணிப்பாளர் நாயகத்திடம் பிரதமர் அலுவலகம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 29

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் குஞ்சுக்கால் வெளிப்பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீக காணிகளில் பெரும்பான்மை இனத்தவரால் அத்துமீறி உப்பளம் அமைக்கும் முயற்சியைத் தடுக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அனுப்பிவைக்கப்பட்டுள் கடிதத்துக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மகாவலி பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதமர் அலுவலகத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த அத்துமீறி உப்பளம் அமைக்கும் முயற்சியைத் தடுக்குமாறு வலியுறுத்தி கடந்த சனிக்கிழமை அன்று பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் 15

## நெடுந்தாரகை இன்றிலிருந்து சேவையில்!



யாழ்ப்பாணம், மார்ச் 29

நெடுந்தாரகை படகுச் சேவை இன்றிலிருந்து இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பண்டிகை கால தேவைகளை கருதி எரிபொருள் கையிருப்பு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச். 29

பண்டிகை கால தேவைகளை கருத்தில் கொண்டு, எரிபொருள் கையிருப்பை அதிகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாட்டில் எரிபொருள் விநியோகம் தடையின்றி நடைபெறுவதற்காக போதுமான அளவு கையிருப்பு ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மயூர நெத்திக்குமாரகே தெரிவித்தார்.

இதன் ஒரு பகுதியாக, 92 ஒக்டேன் பெற்றோல் 30,000 மெட்ரிக் தொன் மற்றும் 95 ஒக்டேன் பெற்றோல் 5,200 மெட்ரிக் தொன் கொண்ட கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும், 35,000 மெட்ரிக் தொன் டீசல் கொண்ட மற்றொரு கப்பலில் இருந்து தற்போது எரிபொருள் இறக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பண்டிகை காலத்தில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்கள் அச்சமின்றி வழமையான முறையிலும் சிக்கனமாக எரிபொருளை பயன்படுத்தலாம் என்றும் அதிகாரிகள் உறுதியளித்தனர். (எ)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு

கொழும்பு, மார்ச். 29

இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவினால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக விசேட இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

டிஜிற்றல் தொழில்நுட்பங்களை பாதுகாப்பான முறையிலும் பொறுப்புடனும் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதே இந்தக் கருத்தரங்கின் பிரதான நோக்கமாகும்.

நவீன காலத்தில் ஆட்சி நிர்வாகம், கொள்கை உருவாக்கம் மற்றும் பொதுமக்கள் தொடர்பாடல்களில் டிஜிற்றல் தளங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுமக்களின் நம்பிக்கையை பாதுகாப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு அவசியமானது என இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. (எ)

# நாட்டில் நெருக்கடிகளை சமாளிக்க அரசிடம் முறையான திட்டம் இல்லை

கொழும்பு, மார்ச் 29

நெருக்கடிகளை சமாளிக்க அரசாங்கத்திடம் முறையான திட்டங்கள் இல்லையென, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதனால் நாடு பாரிய ஆபத்தை நோக்கிச் செல்கிறது எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

மத்திய கிழக்குப் போர்நிலையை முன்கூட்டியே கணித்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தவறியுள்ளதாகவும், சர்வதேச மாற்றங்களைப் புரிந்துகொள்ளாத மெத்தனமான அணுகுமுறை காணப்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

நுரைச்சோலை மின் நிலையத்தில் தரமற்ற நிலக்கரி பயன்படுத்தப்படுவதால் மின் உற்பத்தி குறைந்துள்ளதாகவும், இதை மறைக்க மின் கட்டண உயர்வு திட்டமிடப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பாதிப்புகளும் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் எச்சரித்தார்.

விவசாயத் துறையில் உர மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக உணவுப் பாதுகாப்பு பாதிக்கப்படுவதாகவும், உற்பத்தி குறையும் அபாயம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# 1235 லீற்றர் டீசல் வைத்திருந்த ஒருவர் கைது

கேகாலை, மார்ச். 29

வரகாபொல, மாஹேன பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி 1,235 லீற்றர் டீசல் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

கேகாலை கோட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் தோலங்கமுவ பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் வரகாபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(எ)

# ஏப்ரல் முதலாம் திகதி முதல் விசேட பாதுகாப்புத் திட்டம்

கொழும்பு, மார்ச். 29

இவ்வருட சித்திரை புத்தாண்டு காலத்தை முன்னிட்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் விசேட பாதுகாப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று போக்குவரத்துப் பிரிவு மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ஜே. சேனாதீர தெரிவித்தார்.

புத்தாண்டு காலத்தில் பொதுமக்களின் நடமாட்டம் அதிகரிப்பதைக் கருத்தில் கொண்டு, விசேடமாக போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அதிகளவில் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களின் ரயில் நிலையங்கள் மற்றும் பிரதான பஸ் நிலையங்களை மையப்படுத்தி போக்குவரத்து கட்டுப்பாட்டுத் திட்டங்களும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த விசேட திட்டம் ஏப்ரல் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்பதுடன், புத்தாண்டு கொண்டாட்டங்களின் பின்னர் பொதுமக்கள் மீண்டும் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குத் திரும்பும் வரை இது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

“புத்தாண்டுக்காக விசேடமாக போக்குவரத்து மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளில் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துகிறோம். ஏனைய வருடங்களைப் போன்றே கொழும்புப் பகுதியில் உள்ள ரயில் நிலையங்கள் மற்றும் பிரதான பஸ் நிலையங்களை மையப்படுத்தி போக்குவரத்து மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். பிரதான நகரங்களிலும் இது நடைமுறைப்படுத்தப்படும்.

கிராமங்களுக்குச் செல்லும் மக்கள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்ய நகரங்களுக்கு வருபவர்களின் பாதுகாப்பு குறித்து பொலிஸ் மா அதிபர் விசேட அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

இதற்கமைய அந்தந்த பிராந்தியங்களுக்கு பொறுப்பான அதிகாரிகளின் கீழ் திட்டமிட்ட அடிப்படையில் பொதுமக்களுக்கான பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஏற்கனவே பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும், ஏப்ரல் முதலாம் திகதி முதல் புத்தாண்டு முடிந்து மக்கள் மீண்டும் ஊர் திரும்பும் வரை இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படும்”- என்றார்.(எ)

வெறுப்பு பேச்சுக்களை பேசும்

# தமிழ் அரசியல்வாதிகளுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்




வவுனியா, மார்ச். 29

பிராந்திய மற்றும் இன அடிப்படையிலான இழிவுபடுத்தும் வெறுப்பு பேச்சுக்களை பேசுவதை தமிழ் அரசியல்வாதிகள் உடனடியாக நிறுத்தக் கோரி வவுனியா, பிரமனாலங்குளத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வெறுப்பு பேச்சுக்களை உடனடியாக நிறுத்துங்கள், ஒழுக்க விதிகளை உருவாக்குங்கள், அரசியல் நாகரீகத்தை பேணவும் போன்ற பல்வேறு வாசகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# குளவி கொட்டியதில் 10 மாணவர்கள் பாதிப்பு

பதுளை, மார்ச். 29

பண்டாரவளை பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் நேற்று முன்தினம் காலை குளவி கொட்டியதில் பாதிக்கப்பட்ட 10 மாணவர்கள் பண்டாரவளை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளையிலுள்ள குறித்த பாடசாலையில் 5ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களே இந்தத் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

பாடசாலை வளாகத்தில் மாணவர்கள் விளையாடிக் கொண்டிருந்த போது, திடீரென குளவிக் கூடு கலைந்து அவர்களை கொட்டியுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் உடனடியாக பண்டாரவளை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் எவருக்கும் பாரிய ஆபத்துக்கள் இல்லை எனவும், அவர்கள் தொடர்ந்தும் கண்காணிப்பில் வைக்கப் பட்டுள்ளதாகவும் [illegible] தெரிவிக்கின்றன. (எ)

# எந்தவித தட்டுப்பாடுமின்றி கோழி இறைச்சி விநியோகம்

கொழும்பு, மார்ச். 29

புத்தாண்டு காலத்தில் சந்தையில் எந்தவித தட்டுப்பாடுமின்றி கோழி இறைச்சியை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை விலங்கு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய எரிபொருள் நெருக்கடியால் கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கும் அபாயம் காணப்பட்டபோதிலும், அதனை 1,250 ரூபாய் விலையில் பேணுவதற்கு திட்டமிட்டுள்ளது என்றும் அந்த சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் “உலக சந்தையில் விலங்கு தீவனங்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளன.

ஏப்ரல் மாதமாகும் போது அனைத்து பண்ணைகளும் தமது அதிகபட்ச கொள்ளளவுக்கு உற்பத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும். தட்டுப்பாடின்றி இறைச்சி மற்றும் முட்டைகளை வழங்குவதே எமது முயற்சியாக இருந்தது. ஆனால், நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய எரிபொருள் தட்டுப்பாட்டினால் போக்குவரத்து செலவுகள் அதிகரித்துள்ளன.

அந்தச் செலவை நாம் சுமக்க வேண்டியுள்ளது. எனவே, கோழி இறைச்சிக்கான கேள்வி அதிகரிக்கும் போது, அதற் கேற்ப விநியோகிக்க முடியுமா என்பதைப் பொறுத்தே விலை மாற்றமடையும். விலையை நாங்களல்ல, சந்தையே தீர்மானிக்கிறது.

விநியோகத்தை தட்டுப்பாடின்றி வழங்கவே நாம் எதிர்பார்க்கிறோம், ஏனெனில் தட்டுப்பாடு ஏற்பட்டால் விலை உயர்வு போன்ற நிலைமைகள் உருவாகலாம். திடீரென டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டால், வருங்கால நிலைமை குறித்து எம்மால் எதுவும் கூற முடியாது.”- என்றார்.(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பல பிரதேசங்களில்

# மனித உடலுக்கு உணரப்படும் வெப்பநிலை காணப்படும்

கொழும்பு, மார்ச். 29

இலங்கையின் பல பிரதேசங்களில் மனித உடலுக்கு உணரப்படும் வெப்பநிலை "அவதானம் செலுத்த வேண்டிய" மட்டத்தில் இருக்கக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, தெற்கு, கிழக்கு, வடமேல், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்திலும் சில இடங்களில் மனித உடலுக்கு உணரப்படும் வெப்பம் 39 பாகை செல்சியஸ் முதல் 45 பாகை செல்சியஸ் வரை பதிவாகக்கூடும் என்று அந்தத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் அஜித் விஜேமான்ன தெரிவித்தார்.

நிலவும் கடும் வெப்பத்தினால் ஏற்படக்கூடிய சுகாதார பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கடும் வெப்பம் சிறுவர்கள், முதியவர்கள் மற்றும் நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்று மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அதிக நேரம் வெப்பத்துக்கு முகம் கொடுப்பதால் உடலில் நீர்ச்சத்து குறைதல், வெப்பப் பிடிப்பு மற்றும் வெப்பத்தாக்கம் போன்ற நிலைமைகள் ஏற்படலாம் என்பதால் மக்கள் அவதானமாக இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

முற்பகல் 10. 00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை நேரடியாக வெயிலில் செல்வதைத் தவிர்க்கவும்.

வெளியே செல்லும் போது தொப்பி மற்றும் வெயில் கண்ணாடி அணிவது சிறந்தது.

மென்மையான நிறமுடைய, தளர்வான ஆடைகளை அணியவும்.

உடலில் நீர்ச்சத்தைப் பேண அடிக்கடி நீர் அருந்தவும். மயக்கம், அதிகப்படியான வியர்வை அல்லது அதீத சோர்வு ஏற்பட்டால் உடனடியாகக் குளிர்ந்த இடத்திற்குச் செல்லவும், பாதிப்புத் தொடர்ந்தால் மருத்துவ ஆலோசனையைப் பெறவும்.- என்றார். (எ)

# ஊடகங்களை அடக்க நினைப்பது மிகவும் மோசமான செயல்

யாழ்ப்பாணம், மார்ச். 29

மக்கள் வரிப் பணத்தில் இடம்பெறும் அபிவிருத்தி குழு கூட்டங்களை மக்கள் அறிய வேண்டும். ஊடகங்களை அடக்க நினைப்பது மிகவும் மோசமான செயல் என்று வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி. நிரோஷ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில், ஊடகங்கள் தொடர்பில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்த கருத்து தொடர்பில் தவிசாளர் நிரோஷ் இவ்வாறு குறிப்பிட்டார்.

மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டங்கள் மக்கள் வரிப்பணத்தில் இடம்பெறுகின்றன. அதில் இடம்பெறுகின்ற விடயங்களை மக்கள் அறிவதற்காக ஊடகங்களின் உதவி தேவை.

மக்கள் தாம் வாக்களித்த பிரதிநிதிகள் தமக்காக என்ன கதைக்கிறார்கள் என்பது தொடர்பில் அறிவது அவர்களின் உரிமை. அதை ஊடகங்கள் அவர்களுக்கு சரியான முறையில் வழங்க வேண்டும்.

அதை விடுத்து ஊடகங்கள் காணொலி எடுப்பதை கட்டுப்படுத்தும் செயல்பாடு மோசமான ஒரு அடக்குமுறையாகும். - என்றார். (எ)

# மருத்துவமனைக்கு வரப்போகும் கியூ. ஆர்.



காலி, மார்ச். 29

காலி, கராப்பிட்டிய தேசிய மருத்துவமனையின் வெளிநோயாளி பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட புதிய டிஜிற்றல் மயமாக்கல் வேலைத்திட்டத்தை சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி பார்வையிட்டார்.

மருந்து பெற்றுக்கொள்வதற்காக நோயாளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து எதிர்நோக்கும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக, 'ஸ்மார்ட் டோக்கன்' முறைமைக்கு அமைய இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இலங்கையில் மருத்துவமனை ஒன்றில் முதன் முறையாக இவ்வாறான திட் டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இது ஒரு முன்னோடித் திட்டமாகும். எதிர்காலத்தில் இதனை கியூ. ஆர். முறைமை ஊடாக மேலும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மருத்துவமனையின் பணிப்பாளர் எம். ரங்க தெரிவித்தார்.

இதன் மூலம் வெளிவாரியாக மருந்து பெறுவதற்கும் இதே முறைமையை அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருட்களுடன் பெண் ஒருவர் சிக்கினார்

கொழும்பு, மார்ச். 29

பஞ்சிகாவத்தை பகுதியில் பெருமளவு போதைப்பொருட்களை வைத்திருந்த பெண் ஒருவர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டார்.

புறக்கோட்டை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பஞ்சிகாவத்தை பகுதியைச் சேர்ந்த 34 வயது பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 710 கிராம் 603 மில்லி கிராம் 'ஐஸ்' போதைப் பொருள், 934 கிராம் 575 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் 300 கிராம் 575 மில்லி கிராம் 'ஹேஷ்' போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

அத்துடன், 300 போதை மாத்திரைகள், ஒரு மின்னணு தராசு, பணம் எண்ணும் இயந்திரம், போதைப்பொருள் வியாபாரம் மூலம் ஈட்டப்பட்டதாக நம்பப்படும் 8 இலட்சத்து 59,730 ரூபாய் பணம் மற்றும் 06 தொலைபேசிகளும் அந்தப் பெண்ணிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (எ)

# வினைத்திறனான சேவைக்காக முல்லைத்தீவில் விசேட மாநாடு

முல்லைத்தீவு, மார்ச். 29

முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு அரச நிர்வாகத்தின் மூலம் மிகவும் வினைத்திறனான மற்றும் துரிதமான சேவையை வழங்குவதை இலக்காகக் கொண்டு, 2026 ஆம் ஆண்டுக்கான மூன்றாவது மாவட்ட பிரதேச செயலாளர்கள் மாநாடு துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது. மாநாட்டுக்கு முன்னதாக, துணுக்காய் பிரதேச செயலகத்திற்கு வருகை தந்த அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினர், செயலகத்தின் அலுவலகச் செயல்பாடுகள் மற்றும் கோப்புப் பராமரிப்பு முறைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

மக்களின் வாழ்வாதாரம் மற்றும் மாவட்டத்தின் தற்போதைய சவால்கள் குறித்து இம் மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது:

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டினால் மாவட்டத்தில் எழுந்துள்ள நெருக்கடி நிலைமைகள் மற்றும் அரச செலவினக் கட்டுப்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் மற்றும் நஷ்டஈடு வழங்கும் பணிகள் குறித்தும் மீளாய்வு செய்யப்பட்டது.

2026 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகள், குறிப்பாக கிராமிய வீதி அபிவிருத்தி மற்றும் சமூக நலத்திட்டங்களை முன்னெடுப்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

பிரதேச செயலகங்கள் எதிர்நோக்கும் நிதி மற்றும் திட்டமிடல் ரீதியான சவால்கள், 2026 வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்துதல் மற்றும் வெலிஓயா பிரதேசத்தின் அடிப்படைப் பிரச்னைகளுக்கான தீர்வுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. (எ)

# ஈரான் மீதான போரை நிறுத்து: பொத்துவிலில் ஆர்ப்பாட்டம்

பொத்துவில், மார்ச். 29

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது முன்னெடுத்து வரும் போர் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தி, பொத்துவிலில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாரிய கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை- பொத்துவில் பெரிய ஜும்மா பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகை நிறைவடைந்ததும், சுயாதீன இளைஞர் அமைப்பினால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பள்ளிவாசலுக்கு முன்பாக ஆரம்பமான கண்டனப் பேரணி, பொத்துவில் ஆதார மருத்துவமனை வரை சென்றது.

அமெரிக்கா தனது பொருளாதார நலன்களுக்காகவும், ஏகாதிபத்திய நோக்கத்துக்காகவும் ஈரான் மீது தொடுத்துள்ள இந்தப் போர், உலகளாவிய ரீதியில் பாரிய நெருக்கடிகளை உருவாக்கியுள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்தப் போர் தொடருமானால் இலங்கை போன்ற நாடுகள் கடுமையான பொருளாதார மற்றும் எரிசக்தி நெருக்கடிகளை சந்திக்க நேரிடும். எனவே, இலங்கை அரசு இது தொடர்பில் தீர்க்கமான சர்வதேச நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

பலஸ்தீனம், ஈராக், ஆப்கானிஸ்தான் வரிசையில் தற்போது ஈரான் மீதும் யுத்தம் திணிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர்கள், இதனால் கொல்லப்படும் அப்பாவிப் பொதுமக்களுக்காகத் தமது கண்டனத்தை வெளியிட்டனர். (எ)

# கினிகத்தேன பகுதியில் காட்டுக்கு தீ வைப்பு!

ஹற்றன், மார்ச். 29

ஹற்றன் வனவள திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் தீ வைக்கப்பட்டுள்ளது.

மலையகத்தில் கடுமையான வறண்ட வானிலை நிலவி வரும் சூழ்நிலையில், ஏதேனும் ஒரு குழுவினர் தொடர்ந்து காடுகளுக்கு தீ வைத்து வருவதாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

ஹற்றன் வனவள திணைக்கள அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகளும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

காடுகளுக்கு தீ வைப்பது குற்றச்செயலாகும். எனவே தீ வைப்பவர்கள் இனங்காணப்படும் பட்சத்தில், அவர்களுக்கு எதிராக தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)




# அதிவேக நெடுஞ்சாலையில் தீப்பற்றி எரிந்த சொகுசு பஸ்

பயணிகள் மயிரிழையில் உயிர் தப்பினர்

கொழும்பு, மார்ச். 29

கொழும்பிலிருந்து கதிர்காமம் நோக்கிப் பயணித்த சொகுசு பயணிகள் போக்குவரத்து பஸ் ஒன்று நேற்று முன்தினம் தெற்கு அதிவேக வீதியின் வெலிபென்ன இடைமாறல் பகுதிக்கு அருகில் தீப்பற்றி எரிந்தது.

பிற்பகல் 01. 55 மணியளவில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டதுடன், இதில் அந்த பஸ் முழுமையாக எரிந்து சேதமடைந்தது.

தீ பரவியபோது பஸ்ஸுக்குள் பயணிகள் இருந்தபோதிலும், அவர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டதால் எவருக்கும் காயங்களோ அல்லது உயிராபத்தோ ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இணையவழி பண மோசடி: 16 சீனப் பிரஜைகள் கைது!

கொழும்பு, மார்ச். 29

இலங்கையில் தங்கியிருந்து இணையவழி ஊடாக பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 16 சீனப் பிரஜைகளும், இரண்டு கம்போடியப் பிரஜைகளும் நீர்கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்பு பொலிஸாரால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, அங்கிருந்த விடுதி ஒன்றில் வைத்து சந்தேகநபர்களுடன் பெருமளவிலான கணினிகள் மற்றும் உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து, எதிர்வரும் 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து நீர்கொழும்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(எ)

# போலி இணையத்தள மோசடி: தபால் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச். 29

தங்களது அதிகாரபூர்வ இணையத்தளத்தைப் போன்ற ஒரு போலி இணையத்தளத்தைப் பயன்படுத்தி மோசடி நடைபெறுவது குறித்து தகவல் வந்துள்ளது என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு பொதியைப் பெறுவதற்கு கட்டணம் செலுத்த வேண்டும் என்று வாடிக்கையாளர்களுக்கு தொலைபேசியில் குறுஞ்செய்தி மூலம் தெரிவித்து, அந்தத் தொகையை ஒன்லைனில் செலுத்துமாறு கோரி மோசடி நடைபெற்று வருவதாக தபால் துறை ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த மோசடியான செயல்முறையின் கீழ், வாடிக்கையாளர்கள் பணம் செலுத்தும் நுழைவாயில் மூலம் தங்கள் அட்டை விவரங்களை உள்ளிடும்போது, அவர்களின் வங்கிக் கணக்குகளில் உள்ள பணம் மோசடியாகப் பறிமுதல் செய்யப்படுகிறது என்று தபால்மா அதிபர் கூறினார்.

இதன் காரணமாக, பொதுமக்கள் இந்த மோசடியான குறுஞ்செய்தி இணைப்புகள், போலி இணையத்தளங்கள் மற்றும் ஒன்லைன் பணம் செலுத்தும் கோரிக்கைகள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அறியப்படாத இணைப்புகளை அணுக வேண்டாம் என்றும், தங்களது வங்கி அட்டை விவரங்கள் அல்லது ஓ.ரி.பி. எண்களை மூன்றாம் தரப்பு நபர்களுக்கோ அல்லது இணையத்தளங்களுக்கோ ஒருபோதும் வழங்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (எ)

# 73 நீர்த்தேக்கங்களில் 76.47 சதவீத நீர் இருப்பு

වාරිමාර්ග දෙපාර්තමේන්තුව - ශ්‍රී ලංකාව
நீர்ப்பாசன திணைக்களம் - இலங்கை
IRRIGATION DEPARTMENT - SRI LANKA

கொழும்பு, மார்ச். 29

நாட்டிலுள்ள 73 நீர்த்தேக்கங்களில் தற்போது 76. 47 சதவீத நீர் இருப்பு காணப்படுகிறது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 9 நீர்த்தேக்கங்கள் 61. 84 சதவிகித கொள்ளளவைக் கொண்டுள்ளன.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள 10 நீர்த்தேக்கங்களின் நீரின் கொள்ளளவு 92.01 சதவிகிதமாகும்.

பதுளை மாவட்டத்தில் உள்ள 7 நீர்த்தேக்கங்களின் நீரின் கொள்ளளவு 94.93 சதவிகிதமாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 4 நீர்த்தேக்கங்கள் 91.03 சதவிகிதமாகவும் உள்ளன.

திருகோணமலையில் உள்ள ஐந்து நீர்த்தேக்கங்களில் 95.62 சதவீதமும், மன்னார் மாவட்டத்தில் உள்ள நான்கு நீர்த்தேக்கங்களில் 59.97 சதவீதமும் நீர் கொள்ளளவு உள்ளது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(எ)




மோசடிக்கு உடந்தை

# மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் கைதானார்

கொழும்பு, மார்ச். 29

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கப் ரக வாகனமொன்றின் செஸி இலக்கத்தைத் திருத்தி, அதனை போலியான முறையில் பதிவு செய்வதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் நிதி மோசடி விசாரணை பிரிவினரால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்ட கமல் அமரசிங்க, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (எ)

# ஊழல் அமைச்சரை பாதுகாக்கும் அரசு

அஜித் பி பெரேரா எம். பி.

கொழும்பு, மார்ச். 29

மோசடி குற்றப்பத்திரம் கையளிக்கப்படவிருப்பது தெரிந்தும் வலுசக்தி அமைச்சருக்கு எதிராக ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதன் மூலம் இந்த மோசடியின் பங்கு அனைவருக்கும் கிடைத்திருக்க வேண்டும். அத்துடன் வலுசக்தி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் அமைச்சரை பாதுகாக்க வாக்களிக்கும் அனைவரும் ஊழல் மோசடிக்கு ஆதரவாக வாக்களிப்பவர்களாவர். அவர்களை நாட்டு மக்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த நிலக்கரி மோசடி தொடர்பில் கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

“வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றம் குற்றப்பத்திரம் கையளிக்க இருக்கிறது. பிரபல அமைச்சு ஒன்றின் அமைச்சருக்கு எதிராக ஊழல் தொடர்பில் சாட்சி இருப்பதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தீர்மானித்த பின்னர், அவ்வாறான குற்றச்சாட்டுக்குள்ளான வலுசக்தி போன்ற பொறுப்பு வாய்ந்த அமைச்சின் அமைச்சராக தொடர்ந்தும் அவரை வைத்திருப்பது உலக ஜனநாயக சம்பிரதாயங்களுக்கு பொருந்துவதில்லை.

குறிப்பாக உலக ஜனநாயகம் தொடர்பில் கதைத்துவந்த அநுர குமார திஸநாயக்க போன்ற ஜனாதிபதியின் கீழ் இவ்வாறு இடம்பெறுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.”- என்றார். (எ)

# “சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் அதிகாரிகள் நியமிக்கப்படுவர்”

இரத்தினபுரி, மார்ச். 29

மலையகத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் மிக விரைவில் தமிழ் அதிகாரிகள் நியமிக்கப்படுவர் என்று அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், மலையகத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் வெகு விரைவில் தமிழ் அதிகாரிகள் நியமிக்கப்படுவது தொடர்பில் கோரிக்கை முன்வைத்தார்.

இதற்கு அமைச்சர் ஆனந்த விஜயபால பதிலளிக்கையில், குறித்த பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தமிழ் அதிகாரிகளை வெகு விரைவில் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

இந்த நிலையில், மலையக பகுதியில் உள்ள சட்டவிரோத மதுபானங்கள், மதுபான உற்பத்திகளை முழுமையாக தடை செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்படவுள்ளது என்று பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

(எ)

# விபத்தில் சிக்கி தம்பதியர் பலி! ஏழு பேர் காயம்

பதுளை, மார்ச். 29


கிராந்துருகோட்டை பகுதியில் உள்ள 3ஆம் மைல் கல் அருகே கப் ரக வாகனமும் உழவியந்திரமும் மோதியதில் தம்பதியர் உயிரிழந்ததுடன், மேலும் ஏழு பேர் காயமடைந்தனர்.

பொலிஸாரின் தகவல் படி, இந்த விபத்தில் உயிரிழந்தவர்கள் மஹியங்கனை பகுதியைச் சேர்ந்த 57 வயதான ஆண் ஒருவரும், 44 வயதான பெண் ஒருவரும் ஆவர். இவர்கள் பயணம் செய்த கப் ரக வாகனத்தில் மொத்தம் 13 பேர் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த உழவியந்திரத்தின் சாரதி உள்ளிட்ட ஏழு பேரும் மஹியங்கனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ரெலோ தலைமைக்கு எதிராக போராட்டம்!



திருகோணமலை, மார்ச். 29

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் தலைமைத்துவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கட்சியின் 12ஆவது தேசிய மாநாட்டை உடனடியாக கூட்டி புதிய நிர்வாகிகளை தெரிவு செய்ய வலியுறுத்தியும் நேற்று முன்தினம் திருகோணமலையில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலை இயக்க அங்கத்தவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்போராட்டம், கட்சியின் மாவட்ட காரியாலயத்துக்கு முன்பாக ஆரம்பமானது. அங்கிருந்து பதாகைகளை ஏந்தியவாறு சென்ற அங்கத்தவர்கள், திருகோணமலை கடற்கரையில் அமைந்துள்ள வெலிக்கடை தியாகிகள் அரங்குக்கு முன்பாக தொடர்ந்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
29.03.2026 ஞாயிற்றுக்கிழமை

விசுவாவசு வருடம் பங்குனி 15

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## மாகாண சபை தேர்தல்கள் அரசுக்கு நெருக்குதல் கொடுக்க ஒரு வழி

மாகாண சபை தேர்தல்களை விரைவில் நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்க ஜனநாயக ரீதியான மக்கள் போராட்ட இயக்கம் ஒன்றை முன்னெடுக்கப் போவதாக இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த வருட பிற்பகுதியில் அறிவித்திருந்தார்.

ஆனால், நவம்பர் பிற்பகுதியில் டித்வா சூறாவளியோடு அந்த போராட்டக் கதையும் அடித்துச் செல்லப்பட்டு விட்டது போன்று தெரிகிறது.

அதற்கு முன்னதாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி குறிப்பாக முன்னாள் பாராளுமன்ற உறப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் முன்முயற்சியில் மாகாணசபை முறையைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தை தமிழ் மக்களுக்கு விளக்கிக்கூறுவதற்காக வடக்கிலும் கிழக்கிலும் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்துவந்தது. தற்போது அந்த கருத்தரங்குகளையும் காணவில்லை.

தமிழரசு கட்சியையும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியையும் தவிர, மற்றைய குறிப்பிடத்தக்க தமிழ்க் கட்சிகள் மாகாண சபைகளைப் பற்றி பெரிதாக அக்கறை காட்டுவதில்லை. பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாகாண சபைகளைப்பற்றி பேசுவதேயில்லை என்றாலும், இறுதியாக இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கொழும்புக்கு வந்திருந்த வேளையில் மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து அவரைச் சந்தித்த கஜேந்திரகுமார் மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியதாக செய்திகள் வந்தன.

மாகாணசபை தேர்தல்களை நடத்துவதில் அரசாங்கத்துக்கு அக்கறையில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டுவரப் போவதாகக் கூறும் புதிய அரசியலமைப்பில் அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாடு எந்த இலட்சணத்தில் அமையும் என்று எவராலும் 'சோதிடம்' சொல்லமுடியாது.

இத்தகைய ஒரு பின்புலத்தில், மாகாண சபைகள் முறையை அதில் உள்ள குறைபாடுகளுக்கு மத்தியிலும், பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது. மாகாணசபைகளுக்கு எந்த முறையின் கீழ் தேர்தல்களை நடத்துவது என்பது குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்ற தெரிவுக் குழு அதன் முதல் அறிக்கையை மூன்று மாதங்களில் சமர்ப்பிக்கும் என்று அதன் தலைவரான வெளியுறவு அமைச்சச் விஜித ஹேரத் முதலாவது கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்திய கலப்பு முறையில் அன்றி விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாண சபைகளுக்கு தேர்தல்களை நடத்துவதானால் மாத்திரமே மக்களால் தெரிவாகும் பிரதிநிதிகளிடம் விரைவாக மாகாண நிருவாகத்தை ஒப்படைப்பது சாத்தியமாகும். முன்னைய பாராளுமன்றத்தில் சுமந்திரனும் தற்போதைய பாராளுமன்றத்தில் சாணக்கியன் இராசமாணிக்கமும் இது தொடர்பில் தனிநபர் பிரேரணையின் வடிவில் சட்டமூலம் ஒன்றைச் சமர்பித்தனர்.

சாணக்கியனின் சட்டமூலத்தை நிறைவேற்றி மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு விருப்பமில்லையானால் அதுவாகவே அத்தகைய ஒரு சட்டமூலத்தைக் கொண்டு வந்திருக்கலாம். அந்தா நோக்கம் இருந்திருந்தால் அரசாங்கம் தெரிவுக் குழுவை நியமித்திருக்காது. அதனால், விரைவில் தேர்தல்களை நடத்த அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்க வழிதான் என்ன?

காலம் தாழ்த்துவதை தவிர்க்க விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தேர்தலை நடத்த வேண்டும் என்று தெரிவுக்குழுவில் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டாக வலியுறுத்த வேண்டும். அதற்கு சாதமான பதில் கிடைக்காத பட்சத்தில் தேர்தலை தாமதிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்பதை வெளிப்படையாகக் கூறிவிட்டு வெளியேறுவது அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுப்பதற்கான சாத்தியமான ஒரு வழியா[illegible]

## 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் நாடகம் இன்று இறுதி நாள் ஆற்றுகை

*யாழ்ப்பாணம், மார்ச் 29*

திருமறைக் கலாமன்றத்தால் அரை நூற்றாண்டைக் கடந்து வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான திருப்பாடுகளின் நாடகம் இறுதி நாள் ஆற்றுகை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறுகிறது.

திருமறைக் கலாமன்றம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து பிரமாண்டமான படைப்பாக தயாரித்தளிக்கும் திருப்பாடுகளின் நாடகத்தை ஆண்டுதோறும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றார்கள்.

இம்முறை மேடையேற்றப்படும் “காவிய நாயகன்” திருப்பாடுகளின் நாடகம் திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் நீ. மரிய சேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகி முதன்முதலாக 2001ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2004, 2008, 2013 ,2022 ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப் பட்டது. தற்போது ஆறாவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது.

இம்முறை இதற்கான நெறியாள்கையை மன்றத்தின் அரங்கக் கலைஞர்களில் ஒருவரான இரத்தினசிங்கம் ஜெயகாந்தன் மேற்கொண்டுள்ளார்.

(அ)

## பருத்தித்துறை நகர சபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு

*யாழ்ப்பாணம், மார்ச் 29*

பருத்தித்துறை நகர சபையின், 2025 ஆம் ஆண்டிற்கான உள்ளூராட்சி வாரம் மற்றும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு, நகர சபைத் தவிசாளர் விசன்ட் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் நேற்று நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.



விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப் பட்டு, விழா மண்டபம் வரை அழைத்துச் செல்லப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பிரதம விருந்தினராக, பதில் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி சூரிகா சத்யரூபன் பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினராக, பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் செயலாளர் அ.நடராசா பங்கேற்றார்.

இதன்போது உள்ளூராட்சி மன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், சன சமூக நிலைய உறுப்பினர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கி வைக்கப்பட் டன.

இந்த நிகழ்வில், உப தவிசாளர் தேவராஜேந்திரம் மற்றும் உறுப்பினர்கள், சனசமூக நிலைய உறுப்பினர்கள், பொது மக்கள், மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் என பலர் பங்கேற்றனர்.

இதேவேளை, பருத்தித்துறை நகர சபை எல்லைக்குள் தெரிவு செய்யப்பட்ட எட்டுப் பெண்களுக்கு, வாழ்வாதார உதவியாக, தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(அ)

## 2025 இல் இலங்கை பாரிய கடன் தவணையைச் செலுத்தியுள்ளது

*கொழும்பு, மார்ச் 29*

இலங்கையின் வரலாற்றில் மிகப்பெரிய கடன் திருப்பிச் செலுத்தல் 2025 ஆம் ஆண்டிலேயே இடம்பெற்றுள்ளதாக கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

குருணாகலில் நடைபெற்ற சமூக அபிவிருத்தி சபை பிரதிநிதிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் வழங்கிய தகவல்களின்படி 2025 ஆம் ஆண்டில் அரசாங்கம் 3,900 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தவணையைச் செலுத்தியுள்ளது.

2028 இலேயே அதிக கடன் செலுத்த வேண்டி வரும் எனக் கூறினாலும், அந்த ஆண்டில் செலுத்த வேண்டிய தொகை வெறும் 3.2 மில்லியன் அமெரிக்க டொலர் மட்டுமே என அவர் சுட்டிக்காட்டினார்.

2025 ஆம் ஆண்டில் வாகன இறக்குமதிக்காக சுமார் 2,100 முதல் 2,200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்ட போதிலும், அரசாங்கம் நிதி மேலதிகத்தைப் பதிவு செய்துள்ளதாக அவர் விளக்கினார்.

அந்த ஆண்டில் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் 29,300 மில்லியன் அமெரிக்க டொலர்கள். மொத்தச் செலவீனம் சுமார் 27,600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் குறிப்பிட்டார்.

இதன் விளைவாக 1,700 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி மேலதிகத்தை அரசாங்கம் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

சரியான நிதி முகாமைத்துவம் காரணமாகவே இவ்வளவு பெரிய கடன் தவணையைச் செலுத்திய பின்னரும் பொருளாதாரத்தைச் சீராக பேண முடிந்ததாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(அ)

## நெடுந்தாரகை...

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்தில் பழுதடைந்துள்ள நெடுந்தாரகையை திருத்திச் சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அந்தவகையில் நெடுந்தாரகையை நேரடியாகப் பார்வையிட்டு அதனைத் தற்காலிகமாக திருத்துவதற்கான நட வடிக்கையை வடபிராந்திய கடற்படைத் தளபதி அட் மிரல் புடிக்ஹலியனகமகே நடவடிக்கை எடுத்தமைக்கு அமைவாக இன்றிலிருந்து அது சேவையில் ஈடுபடவுள் ளது என தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தாரகையினை நிரந்தரமாக திருத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் விரைவில் நடவ டிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வேர்களும் மரங்களும் வரம்!

கலாநிதி
இளங்கோ கட்டிமுத்து

மனித வாழ்வும் இயற்கைச் சூழலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. பூமியின் இயற்கை சமநிலையைக் காக்கும் இயற்கை வளங்களில் காடுகள் முதன்மையானவை. மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும், தாவரங்களுக்கும் வாழ்க்கையின் ஆதாரமாக காடுகள் விளங்குகின்றன. 1971-ஆம் ஆண்டு நடைபெற்ற 16-ஆவது ஐரோப்பிய விவசாய மாநாட்டில், காடுகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடன், மார்ச் 21-ஆம் தேதி "வன தினம்" கடைப்பிடிக்க முடிவு செய்யப்பட்டது. 2012-ஆம் ஆண்டு ஐ.நா. சபையின் அறிவுறுத்தலின்படி, ஆண்டுதோறும் மார்ச் 21-ஆம் தேதி "உலக வன தினம்" கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

மரங்கள் அடர்ந்த நிலப் பகுதி காடு அல்லது வனம் என்றழைக்கப்படுகிறது. வனம் என்பது காட்டு விலங்குகளுக்கு உரியது. காடுகள் உலகின் உயிர் நாடிகள். ஒரு நாட்டின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி காடுகளாக இருக்க வேண்டும் என ஐ.நா. சபை கூறுகிறது.

காடுகள் பூமியின் "பச்சை நுரையீரல்" என்றும் அழைக்கப்படுகின்றன. மரங்கள் கரியமில வாயுவை உறிஞ்சி, பிராண வாயுவை வெளியிடுவதால் காற்றின் தரம் சுத்தமாகிறது. காடுகள் பூமியின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

காடுகள், மழைச் சுழற்சிக்கு காரணமாகின்றன. காடுகள் அதிகமாக உள்ள பகுதிகளில் மழை அளவும் அதிகமாக இருக்கும். மரம் என்பது வரம்! ஒரு மரம் பூமிக்கு மேலே எப்படி குடை பிடிக்கிறதோ, அதைப் போலவே வேர்களும் பூமிக்குக் கீழே குடை விரிக்கின்றன.

மண் பாதுகாப்பிலும் காடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மரங்களின் வேர்கள், மண்ணை உறுதியாகப் பிடித்திருப்பதால், மண் அரிப்பு ஏற்படுவதைக் குறைக்கின்றன. காடுகள் இல்லாத இடங்களில் மழை பெய்யும் போது, மண் எளிதாகச் சரிந்து போகும். இது நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கைப் பேரழிவுகளுக்கு வழிவகுக்கும். எனவே, காடுகள் இயற்கைப் பாதுகாப்புச் சுவராக செயல்படுகின்றன.

உலகில் உள்ள பல உயிரினங்களின் வாழ்விடமாகவும் காடுகள் விளங்குகின்றன. பல்வேறு வகையான விலங்குகள், பறவைகள், பூச்சிகள் மற்றும் தாவரங்கள் காடுகளில் வாழ்கின்றன. இந்த உயிரினங்களின் வாழ்க்கை காடுகளின் மீது முழுமையாகச் சார்ந்துள்ளது. காடுகள் அழிந்தால், இந்த உயிரினங்களின் வாழ்விடமும் அழிந்துவிடும். இதனால், பல உயிரினங்கள் அழிவின் விளிம்புக்குத் தள்ளப்படுகின்றன. எனவே, உயிரின பல்வகைமையைப் பாதுகாப்பதற்கும் காடுகள் மிகவும் அவசியமானவை.



கிராமப்புற மக்கள் காடுகளின் வளங்களை நம்பி வாழ்கின்றனர். அவர்கள் காடுகளில் இருந்து கிடைக்கும் மரப் பொருள்கள், மூலிகைகள், தேன் போன்றவற்றைப் பயன்படுத்தி தங்களின் வாழ்க்கையை நடத்துகின்றனர். எனவே, காடுகள் சமூக, பொருளாதார ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

மனிதன் ஒரு நாளைக்கு மூன்று சிலிண்டர்கள் அளவு பிராண வாயுவை சுவாசிக்கிறான் என ஆய்வுகள் கூறுகின்றன. ஒரு பிராணவாயு சிலிண்டரின் விலை ரூ. 700 என்று வைத்துக் கொண்டாலும் மூன்று சிலிண்டர்களின் விலை ரூ. 2,100. மனிதனின் சராசரி ஆயுள் காலம் 60 வயது என்று வைத்துக்கொண்டால்கூட, ஓராண்டுக்கு ரூ. 4 கோடிக்கும் அதிகமாக செலவாகும். இவ்வளவு விலை உயர்ந்த, மதிப்பு மிகுந்த சுவாசக் காற்றை நமக்காக மரங்கள் இலவசமாகத் தருகின்றன.

ஆனால், இன்றைய உலகில் பல்வேறு காரணங்களால் காடுகள் அழிவைச் சந்தித்து வருகின்றன. சாலைகள், ரயில்வே விரிவாக்கப் பணிகளுக்காக மரங்கள் வெட்டப்படுகின்றன. வனப் பகுதியில் காட்டுத் தீயால் மரங்கள் எரிந்து சேதமடைகின்றன. மக்கள் பயன்பாட்டுக்காக வும் மரங்கள் வெட்டப்படுகின்றன. விளைநிலங்கள், குடி யிருப்புப் பகுதிகளாக மாறுவதால் காடுகளின் அளவு குறைகிறது.

உலக வனத் துறை சட்டப்படி, ஒரு மரத்தை வெட்டும் போது, அதற்குப் பதிலாக 10 மரக்கன்றுகள் நடப்பட வேண்டும் என்பது விதி. ஆனால், கடந்த 50 ஆண்டுகளில் ஒரு சதவீதம் மட்டுமே மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அனைவரும் வீடுகளில் மரம் வளர்ப்பதுடன், ஏற்கெனவே இருக்கும் மரங்களைப் பராமரித்தால் வனங்களைப் பாதுகாக்கலாம்.

மனிதனுக்காக மட்டும் இந்த உலகம் படைக்கப்படவில்லை. ஒட்டுமொத்த உயிரினங்களுக்கும் பொதுவானது. நீரும், நிலமும், காற்றும், ஆகாயமும், ஏன் அண்டவெளியும் எனக்கானது, என்னுடையது என்ற மனிதனின் குறுகிய எண்ணம்தான் காடுகள் ரிசார்ட்டுகளாக மாறவும், யானைகளின் வழித்தடங்களை ஆக்கிரமித்து கட்டடங்களைக் கட்டவும், வன உயிர்களை மருந்துக்காகவும், அலங்காரப் பொருள்களுக்காகவும் வேட்டையாடவும் துணிச்சலைத் தந்திருக்கிறது.

மனிதன் இல்லாவிட்டாலும் மரங்கள் வாழும். ஆனால், மரங்கள் இல்லாவிட்டால் மனிதன் வாழ முடியாது. காடுகள் செழிப்பாக இருந்தால்தான், நாடு செழிப்பாக இருக்கும். காட்டு வளமே நாட்டுவளம். காடழிந்தால் நாடழியும் என்பது ஆன்றோர் வாக்கு.

**மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்**
**காடும் உடையது அரண். (குறள் 742)**

தூய்மையான நீரும், நிலமும், மலைப் பகுதியும், நிழலை அணியாக அணிந்த காட்டுப் பகுதியும், அதாவது வெயில் நுழைவு அறியாதவாறு மர அடர்வு கொண்ட காட்டுப் பகுதியும் ஒரு நாட்டின் பாதுகாப்பை, அதன் நல் இருப்பை உறுதி செய்யும் என்று திருவள்ளுவர் விளக்குகிறார்.

ஆண்டுதோறும் உலக வன தினத்துக்கு ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் அறிவிக்கப்படுகிறது. "காடுகள் மற்றும் பொருளாதாரங்கள்" என்பது நிகழாண்டின் கருப்பொருளாக அறிவிக்கப்பட்டுள்ளது. (தினமணி)

# இந்தவார ராசிபலன் 29.03.2026 - 04.04.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 15

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவாதசி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிகச் சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் சவால் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் விரைந்து நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி பொருள் வரவு அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் நம்பிக்கையுடன் இறங்கலாம். பிள்ளைகளால் சந்தோசம் உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் நீங்கும். பெரியோர்களின் ஆசி உண்டு.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டமாக இருக்கும் , சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சிறப்பான முறையில் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் முன்னேற்றகரமாக இருக்கும். வார கடைசியில் பண வரவு உயரும். புதிய முயற்சிகளில் துணிச்சலாக ஈடுபடலாம். குடும்பத்தில் அன்பு அதிகரித்து மகிழ்ச்சி உண்டாகும். பிள்ளைகளால் மன நிம்மதி அதிகரிக்கும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிதமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டமாக இருக்கும், சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள அதிகரிப்பு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பொருள் வரவு உண்டாகும். புதிய முயற்சிகளில் கவனமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் விலகி மன அமைதி அதிகரிக்கும். மகிழ்ச்சியும் சந்தோஷமும் உண்டாகும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் போராட்டமாக இருக்கும், சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை உயர்வு வரலாம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் கை இருப்பு அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கி நிம்மதி அதிகரிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் அழுத்தம் உண்டாகும். சில இடங்களில் அயராது உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து வங்கி இருப்பு அதிகரிக்கும். புதிய தொழிலில் தைரியமாக ஈடுபடலாம்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சவால்கள் இருக்கும் , சில இடங்களில் எதிர்ப்புகள் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு பதவி உயர்வு வரலாம். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி கையிருப்பு அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சலசலப்பு நீங்கி சந்தோசம் உண்டாகும். பிள்ளைகளால் குதூகலம் அதிகரிக்கும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சவாலாக இருக்கும். சில இடங்களில் வேலையில் கடுமையாக இருக்கும். உத்தியோக ரீதியாக உங்கள் திறமைக்கேற்ற ஊதிய உயர்வு உண்டாகும். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நல்ல முறையில் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி வருமானம் அதிகரிக்கும். புதிய முதலீடுகளில் தைரியமாக ஈடுபடலாம்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிதமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டமாக இருக்கும் , சில இடங்களில் சவால் அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தாமதமாகும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சராசரியாக இருக்கும், புதிய முயற்சிகளில் கவனமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த மன கஷ்டம் நீங்கி சந்தோசம் சற்று அதிகரிக்கும், பிள்ளைகளால் பிரச்சனைகள் அதிகரிக்கும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மத்திபமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் போராட்டமாக, சில இடங்களில் சவாலாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக பணி மாறுதல்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சற்று சுணக்கமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து தன வரவு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் எச்சரிக்கையாக ஈடுபடலாம்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் கொஞ்சம் சவாலான நிலை உண்டாகும், சில இடங்களில் போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு கிடைக்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி செல்வ செழிப்பு அதிகரிக்கும், புதிய தொழிலில் தைரியமாக ஈடுபடலாம். மனக்கஷ்டம் விலகும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக ஏற்றமான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் போராட்டம் உண்டாகும், சில இடங்களில் சவாலாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி மாற்றம் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் உடனே நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் பொருள் வரவும் அதிகரித்து உங்கள் வங்கி இருப்பு உயரம், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், பிள்ளைகளால் மன நிம்மதி உண்டாகும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் போராட்டமாக இருக்கும் , சில இடங்களில் சவால் நிறைந்ததாக இருக்கும். உத்தியோக ரீதியாக பணி மாற்றம் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நல்ல முறையில் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து செல்வ நிலை மேம்படும், புதிய தொழிலில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சிரமங்கள் நீங்கி அமைதி அதிகரிக்கும், பிள்ளைகளால் மன நிம்மதி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எட்டுப் போர்களை நிறுத்தியதாக பெருமை பேசியவர் தனது போரை நிறுத்த முடியாமல் தடுமாறும் விசித்திரம்!



வீரகத்தி தனபாலசிங்கம்

2025 ஜனவரியில் இரண்டாவது தடவையாக வெள்ளை மாளிகைக்குள் பிரவேசித்த பிறகு பத்து மாத காலப் பகுதிக்குள் உலகின் பல்வேறு பிராந்தியங்களில் எட்டுப் போர்களை தடுத்து நிறுத்தியதாக பெருமையுடன் உரிமை கோரிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒரு தொலைபேசி அழைப்பின் மூலமாக தன்னைத் தவிர, வேறு எவரினால் அவ்வாறு போர்களை நிறுத்த முடியும் என்று கேள்வியெழுப்பி கர்வம் காட்டினார்.

ஆனால், தற்போது இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகுவுடன் சேர்ந்து ஈரானுக்கு எதிராக தான் தொடுத்த போரை நிறுத்த முடியாமல் அவர் தடுமாறிக் கொண்டிருக்கிறார்.

போரைத் தொடங்குவதற்கு முன்னதாக அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் மூன்று குறிக்கோள்கள் இருந்தன. அணுத் திட்டத்தை மூடுவதற்கு ஈரானை நிர்ப்பந்திப்பது, உயர்ந்தளவுக்கு செறிவூட்டப்பட்ட யூரேனியத்தை ஈரானில் இருந்து வெளியே கொண்டு போக வைப்பது,

மேற்காசியாவில் அரசு அல்லாத திரட்டல் படைகளுக்கு ஈரான் வழங்கி வரும் ஆதரவைத் துண்டிப்பதுடன் அதன் ஏவுகணை ஆற்றல்களை நிர்மூலம் செய்வது.

ஆனால், சரியாக ஒரு மாதம் கடந்த நிலையில், ஹோர்முஸ் நீரிணையைத் திறக்க வேண்டியிருப்பதே ட்ரம்பின் முக்கியமான முன்னுரிமைக்குரிய விடயங்களில் ஒன்றாக இருக்கிறது. போர் வெடித்த பின்னர் ஈரான் மூடிய அந்த நீரிணையை திறப்பதற்கு அவருக்கு எளிதான தெரிவுகள் இல்லை. ஒன்றில் தெஹ்ரானுடன் பேச்சுவார்த்தையை நடத்தி உடன்பாடொன்றுக்கு வேண்டியிருக்கிறது அல்லது தரையில் இராணுவ நடவடிக்கைக்கு அதிகாரமளிக்க வேண்டியிருக்கிறது.

ஆயிரக்கணக்கான துருப்புகளை ஏற்கெனவே அமெரிக்கா வளைகுடாவுக்கு அனுப்பி வைத்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

ஈரானின் எரிசக்திவள உட்கட்டமைப்புக்கள் மீதான தாக்குதல்களை சில நாட்களுக்கு நிறுத்துவதாக ட்ரம்ப அறிவித்திருப்பது பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் நாட்டம் இருப்பதாக உலகிற்கு காண்பித்துக்கொண்டு மறுபுறத்தில் ஈரான் மீதான தாக்குதல்களை கடுமையாக தீவிரப்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்வதற்கு காலஅவகாசத்தைப் பெறும் ஒரு தந்திரோபாயமாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அமெரிக்கா பாகிஸ்தான் ஊடாக 15 அம்ச சமாதான யோசனையை கடந்த வாரம் ஈரானுக்கு அனுப்பியது. அதை நிராகரித்த தெஹ்ரான் அதன் சொந்த நிபந்தனைகளை முன்வைத்திருக்கிறது.

ஈரான் அதன் அணுத் திட்டத்தைக் கைவிட்டு ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறந்தால் அதற்கு பிரதியுபகாரமாக 30 நாட் களுக்கு போர்நிறுத்தம் செய்து தடைகளில் தளர்வுகளைச் செய்யத் தயாராக இருப்பதாக அமெரிக்கா அறிவித்தது.

ஆனால், பெப்ரவரி 28 அதியுயர் ஆன்மீகத் தலைவர் அயத்தொல்லா அலி காமெனியையும் வேறுபல தலைவர்களையும் விமானக்குண்டு வீச்சுக்களின் மூலம் படுகொலை செய்து அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடங்கிய போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஈரான் ஐந்து நிபந்தனைகளை முன்வைத்திருக்கிறது.

ஆக்கிரமிப்பையும் படுகொலைகளையும் முற்றுமுழுதாக நிறுத்த வேண்டும், எதிர்காலத் தாக்குதல்களை தடுப்பதற்கு உறுதியான செயற்பாட்டு முறைகள் வகுக்கப்படவேண்டும், போரின் விளைவான அழிவுகளுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும், சகல முனைகளிலும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும், ஹேரர்முஸ் நீரிணை மீதான ஈரானின் இறைமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பவையே அந்த நிபந்தனைகள்.



**இந்த கட்டத்திலாவது போரை நிறுத்துவதற்கு ட்ரம்புக்கு உண்மையில் அக்கறை இருக்குமானால், எந்தவொரு இராஜதந்திர முயற்சியிலும் முன்னேற்றம் ஏற்படுவதற்கு முன்னதாக வெறிபிடித்த அடாவடிக்காரன் போன்று ஈரான் மற்றும் லெபனான் மீது குண்டுமாரி பொழிந்து கொண்டிருக்கும் தனது போர்க் கூட்டாளியான இஸ்ரேலியப் பிரதமர் நெதான்யாகுவை அவர் அடக்கிவைக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.**

அதியுயர் தலைவர் உட்பட தலைவர்களும் படைத்தளபதிகளும் கொல்லப்பட்ட பின்னரும் கூட தலைமைத்துவக் கட்டமைப்பு முற்றாக நிலைகுலையாமல் இஸ்ரேலுக்கும் அமெரிக்கப் படைத்தளங்களைக் கொண்டிருக்கும் வளைகுடா அரபு நாடுகளுக்கும் எதிரான ஏவுகணைத் தாக்குதல்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருப்பது மாத்திரமல்ல, மிலேச்சத்தனமான ஒரு மாதகாலக் குண்டு வீச்சுகளின் விளைவான முன்னென்றுமில்லாத அழிவுகளுக்கு மத்தியிலும் கூட அமெரிக்காவின் நிபந்தனைகளின் அடிப்படையில் போரை முடிவுக்குக் கொண்டு வர முடியாது என்ற உறுதிப்பாட்டுடன் ஈரான் அடிபணியாமல் நிற்பது உலகை வியக்க வைக்கிறது.

எந்த நேரத்தில் எந்த விதமாக நடந்து கொள்வார் என்றோ அல்லது பேசுவார் என்றோ கூறமுடியாத தான்தோன்றித்தனமான பேர்வழியான ட்ரம்ப் போர் நிலைவரம் குறித்து தெரிவித்து வரும் கருத்துக்களை உலகினால் நம்ப முடியாமல் இருக்கிறது.

போரில் அமெரிக்கா ஏற்கெனவே வெற்றி பெற்றுவிட்டது என்று ஒரு தடவை கூறிய அவர் சில நாட்கள் கழித்து ஹோர்முஸ் நீரிணையைத் மீண்டும் திறப்பதற்கு போர்க் கப்பல்களை அனுப்பி வைக்குமாறு மற்றைய நாடுகளை குறிப்பாக, வட அத்திலாந்திக் ஒப்பந்த இராணுவக் கூட்டணியின் (நேட்டோ) உறுப்பு நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்தார். ஆனால், அந்த நாடுகள் அமெரிக்காவுடன் போரில் இணைந்து கொள்வதற்கு திட்டவட்டமாக மறுத்து விட்டன.

போர் தொடங்கியதற்கு பிறகு முதற் தடவையாக கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமெரிக்க அமைச்சரவைக் கூட்டத்தில் ட்ரம்ப் தனது வேண்டுகோளை நிராகரித்தமைக்காக நேட்டோ நாடுகளை கடுமையாகக் கண்டனம் செய்தார். திட்டமிடப்பட்ட கால அட்டவணைக்கு முன்னதாகவே போரில் அமெரிக்கா வெற்றியை நோக்கிச் செல்வதாக அமைச்சரவையில் கூறிய அவர் உடன்பாடொன்றுக்கு வருவதற்கு ஈரான் தன்னைக் கெஞ்சிக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார் .

இதனிடையே, ஈரானுக்கு எதிரான போர் மாதங்களில் அல்ல வாரங்களில் முடிவுக்கு வந்துவிடும் என்று அமெரிக்கா எதிர்பார்ப்பதாக அதன் இராஜாங்க அமைச்சர் மக்றோ ரூபியோ கடந்த வெள்ளக்கிழமை பிரான்சில் ஜி- 7 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடனான சந்திப்பின்போது கூறியிருக்கிறார். ஹோர்முஸ் நீரிணையை பயன்படுத்துவதற்கு கப்பல்களுக்கு கட்டணம் அறவிடும் முறையை நடைமுறைப்படுத்துவது குறித்து ஈரான் தீர்மானிக்கக்கூடும் என்று அவர் அங்கு செய்த எச்சரிக்கை அந்த நீரிணையை திறப்பதற்கு மற்றைய நாடுகளின் உதவி அமெரிக்காவுக்கு அவசியமாகத் தேவைப்படுகிறது என்பதை உணர்த்துகிறது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, இது இன்னொரு பின்னடைவுப் போராக அமையப் போகிறது என்பதையே இதுவரையான நிகழ்வுப்போக்குகள் கட்டியம் கூறுகின்றன. அதனால், ஈரானை மீண்டும் தலையெடுக்காமல் செய்வதற்காக அதன் இராணுவ மற்றும் பொருளாதாரக் கடமைப்புக்களை இயன்றவரை நிர்மூலம் செய்வதில் அமெரிக்காவும் இஸ்ரேலும் முனைப்புக் காட்டக்கூடிய பேராபத்து இருக்கிறது. அதற்கு பதிலடியாக வளைகுடா அரபு நாடுகளின் எண்ணெய் வளங்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களை தீவிரப்படுத்தும் சாத்தியம் இருக்கிறது. இதனால் ஒட்டு மொத்ததில் மத்திய கிழக்கின் எண்ணெய் வளமே அழியப் போகிறது.

போருக்காக இதுவரையில் அமெரிக்காவுக்கு 30 - 40 பில்லியன் டொலர்களும் இஸ்ரேலுக்கு 300 மில்லியன் டொலர்களும் நாளொன்றுக்கு செலவாகுவதாக 'த கார்டியன்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

அமெரிக்காவுக்கு ஈரான் எந்தவிதமான உடனடி ஆபத்தையும் தோற்றுவித்திருக்கவில்லை என்றும் இன்றைய போர் இஸ்ரேலின் தயாரிப்பு என்றும் கூறி போர் தொடங்கிய மூன்று வாரங்களில் அமெரிக்காவின் பயங்கரவாத தடுப்பு நிலையத்தின் பணிப்பாளரான ஜோ கென்ற் தனது பதவியை இராஜினாமா செய்தமை போரை தொடங்கியமைக்காக ட்ரம்ப் தனது நிருவாகத்திற்குள் எந்தளவுக்கு அதிருப்தியை எதிர்நோக்குகிறார் என்பதைக் காட்டுகிறது.

2025 ஜூலையில் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட குடியரசு கட்சிக்காரரான கென்ற், "இஸ்ரேலிடமிருந்தும் அதற்கு ஆதரவான செல்வாக்குமிக்க யூத ஆதரவுக் குழுக்களிடமிருந்தும் வந்த நெருக்குதலின் விளைவாகவே இந்தப் போரை நாம் தொடங்கியிருக்கிறோம் என்பது தெளிவானது. இதை நல்ல மனச்சாட்சியுடன் ஆதரிக்க முடியாது" என்று குறிப்பிட்டிருந்தார்.

உலகின் பல்வேறு பிராந்தியங்களில் படைகளை தரைப் போரில் இறக்கியதன் விளைவாக அதன் வரலாற்றில் பெற்ற படுமோசமான அனுபவங்களில் இருந்து அமெரிக்கா இன்னமும் படிப்பினை எதையும் பெற்றுக்கொள்ளத் தயாரில்லை என்பதையே ட்ரம்பின் தற்போதைய செயற்பாடுகள் உணர்த்துகின்றன.

இந்த கட்டத்திலாவது போரை நிறுத்துவதற்கு ட்ரம்புக்கு உண்மையில் அக்கறை இருக்குமானால், எந்தவொரு இராஜதந்திர முயற்சியிலும் முன்னேற்றம் ஏற்படுவதற்கு முன்னதாக வெறிபிடித்த அடாவடிக்காரன் போன்று ஈரான் மற்றும் லெபனான் மீது குண்டுமாரி பொழிந்து கொண்டிருக்கும் தனது போர்க் கூட்டாளியான இஸ்ரேலியப் பிரதமர் நெதான்யாகுவை அவர் அடக்கிவைக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கடந்த காலப் பிரச்சினைகளை கையாளுவதற்கு முன்வரும் அரசாங்கம்!



கலாநிதி ஜெகான் பெரேரா

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் சகலரையும் இலங்கைக்கு திரும்பி வருமாறு வலியுறுத்தியிருக்கும் அமைச்சர் பிமால் இரத்நாயக்க, அவர்களை எமது சமூகத்தில் ஒன்றிணைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கூறியிருக்கிறார். இந்தியாவில் தொடர்ந்தும் தங்கியிருக்க விரும்பும் அகதிகளுக்கு குடியுரிமையை வழங்குமாறு இந்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கும் அவர், அந்த அகதிகள் இலங்கையைத் தெரிவு செய்வார்களேயானால், இரு கரங்களாலும் அவர்களை அரசாங்கம் வரவேற்கும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கை தமிழரசு கட்சியின் பெருந் தலைவரும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வென்றுக்காக குரல் கொடுத்தவருமான எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மகன் எஸ்.சி. சந்திரகாசன் தலைமையிலான அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனமான ஈழ அகதிகள் புனர்வாழ்வுக்கான அமைப்புக்கு அமைச்சர் இரத்நாயக்க உரிய பாராட்டைத் தெரிவித்தார்.

சந்திரகாசனின் அமைப்பு அகதிகளுக்கு குறிப்பாக இந்தியாவில் உள்ள தமிழ் அகதிகளுக்கு பல தசாப்தங்களாக உதவி வருகிறது. இலங்கை அகதிகள் தங்களது சுயவிருப்பத்தின் பேரில் இலங்கை திரும்புவதை ஆதரித்து குரல் கொடுத்ததுடன் அந்த அமைப்பு அதற்கான ஆவணங்களை தயார் செய்து கொடுத்து வந்திருக்கிறது.

டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்டவர்களை மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மந்தகதியில் நகர்வதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இந்தியாவில் இருந்து நாடுதிரும்பும் அகதிகளைக் கையாளுவதற்கு போதுமான முன்னேற்பாடுகளை செய்யவேண்டிய தேவை அரசாங்கத்துக்கு ஏற்படும். சாத்தியமான சகல உதவிகளும் அரசாங்கத்துக்கு தேவைப்படும். மக்களுக்கு நேரடியாக உதவும்போது அரசாங்க சார்பற்ற தன்னார்வ அமைப்புகள் செய்யும் பணிகளை அரசாங்கம் மெச்சுகிறது என்பதை அமைச்சர் இரத்நாயக்கவின் கருத்து எடுத்துக் காட்டுகிறது.

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளின் பிரச்சினை மூன்று தசாப்த கால போரின் ஒரு மரபாகும். அந்த போர் தமிழ் மக்களை வெளிநாடுகளுக்கு புலம்பெயர வைத்தது. பரவலாக மேற்கோள் காட்டப்படுகின்ற மதிப்பீடுகளின் பிரகாரம் இன்று புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை பத்து இலட்சத்துக்கும் அதிகமாகும். உலகளாவிய ரீதியில் அவர்களின் தொகை பெரும்பாலும் பத்து இலட்சத்துக்கும் 15 இலட்சத்துக்கும் இடைப்பட்டது என்று கூறபடுகிறது. அவர்கள் பெரிய சமூகங்களாக கனடா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அவுஸ்திரேலியாவில் வாழ்கிறார்கள்.

இந்தியா குறிப்பாக, தமிழ்நாடு கணிசமான அகதிகள் சனத்தொகைக்கு வாழ்வளித்து வருகிறது. தற்போதைய புள்ளி விபரங்கள் தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் 58 ஆயிரத்துக்கும் 60 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான இலங்கைத் தமிழ் அகதிகள் வாழ்வதாகக் கூறுகின்றன. மேலும், 30 ஆயிரத்துக்கும் 35 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையானவர்கள் முகாம்களுக்கு வெளியில் வாழ்கிறார்கள். எல்லாமாக சுமார் 90 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். நாளடைவில் இந்த எண்ணிக்கை வீழ்ச்சியடைந்திருக்கிறது. ஆனால், அவர்கள் இலங்கை மோதலின் கண்ணுக்குத் தெரிகின்ற மனித மரபுகளாக தொடர்ந்து விளங்குகிறார்கள்.

தமிழ் அகதிகளை நாடு திரும்புமாறு அறிவிப்பைச் செய்வதற்கு தற்போதைய தருணத்தை அரசாங்கம் தெரிவு செய்தமை சமகாலத்துக்குள் தொடருகின்ற கடந்த கால மனித உரிமைகள் பிரச்சினைகளை மூடிமுறைக்க அரசாங்கம் முயற்சிக்கவில்லை என்பதை காட்டுகிறது.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் கவலைகளும் கரிசனைகளும் மறக்கப்படாமல் தேசிய நிகழ்ச்சி நிரலில் தொடர்ந்தும் இடம் பெறுகின்றன என்பதை நினைவூட்டுவதற்காகவும் இந்த அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கலாம்.

இந்தியாவில் தொடர்ந்தும் அகதிகளாக வாழ்கின்றவர்களுக்கு புறம்பாக, காணாமல் போனவர்கள் தொடர்பான 14 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் இன்னமும் விசாரணையில் இருக்கின்றன என்று காணாமல்போனோர் விவகார அலுவலகத்தின் மூலமாக அறியக் கூடியதாக இருக்கிறது. அந்த அலுவலகம் நிறுவப்பட்ட பிறகு பல்லாயிரக்கணக்கான முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் சில விடுவிக்கப்பட்டிருந்தாலும், பெருமளவு நிலங்கள் திருப்பிக் கையளிக்கப்படாததால் தொடரும் பிரச்சினைகள், இரத்துச் செய்வதாக அல்லது பதிலீடு செய்வதாக உறுதியளித்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் பிரச்சினை என்று தீர்வுகாணப்படாத வேறுபல பிச்சினைகளும் இருக்கின்றன.

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் விவகாரத்தைக் கையாளுவதில், கடந்த காலத்தை மூடிமறைக்கப் போவதில்லை என்ற செய்தியை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்தியிருக்கிறது. கடந்த காலத்தில் இருந்து எழுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் வரிசைக் கிரமமாக அரசாங்கம் அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கிறது என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன.

அரசாங்கம் அவசரமான பல சவால்களை எதிர்நோக்குகிறது. போர்க்கால மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான அக்கறைகள் போன்ற சில பிரச்சினைகள்



**இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பில் அரசாங்கம் அண்மையில் தெரிவித்த கருத்து மிகவும் முக்கியமானது. அவசரமான பொருளாதார மற்றும் உலகளாவிய சவால்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற போதிலும் கூட, அரசாங்கம் கடந்த காலத்தை மறந்துவிடவில்லை என்பதை இது காட்டுகிறது.**

முன்னைய அரசாங்கங்களினால் விட்டுச் செல்லப்பட்டவை. ஏனைய பிரச்சினைகள் அரசாங்கம் பதவியேற்ற பின்னரான காலப் பகுதியில் அண்மையில் தோன்றியவை.

இந்த நெருக்கடிகளில் மிகுந்த தாக்கத்தைக் கொண்டவை ஒன்றும் அரசாங்கம் தானாக உருவாக்கிக் கொண்டவையல்ல. உலகளாவிய பொருளாதார உறுதிப்பாடின்மை இலங்கையை பெருமளவுக்கு பாதிக்கிறது. மத்திய கிழக்குப் போரின் விளைவாக உலகளாவிய ரீதியில் அத்தியாவசிய எரிபொருட்களுக்கும் பசளை வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அதிகரித்துக் கொண்டிருக்கும் எரிபொருள் விலைகளினால் இலங்கை பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த உலகளாவிய நெருக்குதல்கள் தோன்றுவதற்கு சில மாதங்கள் முன்னதாக இலங்கை காலநிலையுடன் தொடர்புடைய அதிர்ச்சிகளுக்கு முகங்கொடுத்தது. சூறாவளியின் விளைவாக பல மாவட்டங்கள் வெள்ளப் பெருக்கினாலும் மண்சரிவுகளினாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டன. அதனால் உயிரிழப்புகளும் சொத்து அழிவுகளும் வாழ்வாதார இழப்புகளும் ஏற்பட்டன.

அரசாங்கம் அதன் பதவிக்காலத்தின் தொடக்கத்தில் இருந்து பொருளாதார மீட்சிக்கும் பொருளாதாரத்துடன் தொடர்புடைய ஊழல்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியதைப் போன்று போரியல் பொருளாதார உறுதிப்பாட்டை மீண்டும் ஏற்படுத்துவதற்கும் கடன்சுமையின் பாதிப்புக்களை குறைப்பதற்கும் ஆட்சிமுறையை வலுப்படுத்துவதற்கும் இலங்கை மறுசீரமைப்புகளைத் தொடர வேண்டும். அரசாங்கம் அவசரமாகக் கையாள வேண்டிய பொருளாதாரப் பிரச்சினைகள் வடக்கு அல்லது தெற்கு என்று பிராந்திய வேறுபாடின்றி சனத்தொகையின் சகல பிரிவினர்களையும் பாதிக்கிறது. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான நடவடிக்கைகளை பின்போட முடியாது.

ஆனால், கடந்த காலத்தைக் கையாளுதல், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது, அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவது போன்ற பிரச்சினைகள் சிறுபான்மை இனத்தவர்களுக்கு ஆழமான முக்கியத்துவத்தைக் கொண்டவையாக இருக்கின்ற போதிலும், பெரும்பான்மை இனத்தவரால் சமத்துவமான அளவுக்கு அனுபவிக்கப்படுபவை அல்ல. உண்மையில், மாகாணசபைகள் முறைமை சிறுபான்மை இனத்தவர்களின் அக்கறைகளை கவனிப்பதற்கும் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கும் என்று உருவாக்கப்பட்டது.

அரசியல் செயன்முறைகளின் ஊடாகக் கையாளாவிட்டால், தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகள் புதிய வடிவங்களில் வெளிக்கிளம்பவே செய்யும். அதனால், அந்த பிரச்சினைகள் அரசாங்கத்தின் உடனடி முன்னுரிமைக்கு உரியவையாக இல்லாவிட்டாலும் கூட, அவற்றுக்கு விரைவாகத் தீர்வு காணப்பட வேண்டியது அவசியமானதாகும். இனநெருக்கடியும் அதனால் தோற்றுவிக்கப்பட்ட மூன்றுதசாப்த போரும் பொருளாதாரத்துக்கு பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தி துரித பொருளாதார அபிவிருத்திக்கான சகல வாய்ப்புக்களையும் குறைத்த தனியான ஒரு காரணியாகும் என்பதை மறந்துவிடக் கூடாது.

இலங்கையின் முன்னைய தலைவர்கள் சமாதானமாக பேச்சுவார்த்தைகளை நடத்தி தங்களின் வேறுபாடுகளுக்கு தீர்வைக் காணக்கூடியதாக இருந்திருக்குமானால், இலங்கை கிழக்கின் சுவிட்சர்லாந்தாக" வரும் என்ற எதிர்வுகூறல்கள் பலித்திருக்கக்கூடும்.

நீண்டகால சமாதானத்தையும் நீதியையும் உறுதிப்படுத்தக்கூடிய ஒரு வழியில் கடந்தகால பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கான அரிதான ஒரு வாய்ப்பு இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது. பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு இருக்கின்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் முக்கியமான சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு அதற்கு அரசியலமைப்பு ரீதியான விசாலமான பரப்பைக் கொடுத்திருக்கிறது.

சொந்த நோக்கங்களுக்காக இனத்துவ தேசியவாத அடிப்படையில் அணிதிரட்டல்களைச் செய்த அல்லது தேவையான சீர்திருத்தங்களை முன்னெடுத்தால் அரசியல் ரீதியில் ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்று கூடுதலாக அஞ்சிய முன்னைய பல அரசாங்கங்களைப் போலன்றி தற்போதைய அரசாங்கம் இன, மத சிறுபான்மைச் சமூகங்களை பெருமளவுக்கு அரவணைக்கின்ற அணுகுமுறையை வெளிக்காட்டுகிறது.

சர்வதேச அவதானிகள் குறிப்பிட்டதைப் போன்று அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை ஒப்பிட்டளவில் வலுவானதாகவே தொடர்ந்தும் இருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் கிறிஸ்ராலினி ஜோர்ஜீவா அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது "அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை சீர்திருத்தங்களுக்கான வலுவான அத்திபாரமாக அமைவதால் இலங்கைக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது" என்று குறிப்பிட்டிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

பல தசாப்தங்களாக முன்னெடுக்கப்பட்ட ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சகவாழ்வு தொடர்பான பொதுப் போதனையும் நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது போன்று தெரிகிறது. சில வேளைகளில் அரசாங்கத்தின் ஆதரவுடனும் பெரும்பாலும் அரசாங்கத்தின் எதிர்ப்புக்கு மத்தியிலும் சிவில் சமூக அமைப்புக்களினால் முன்னெடுக்கப்பட்ட இந்த போதனை, நீதியையும் நல்லிணக்கத்தையும் நோக்கிய அரசியல் சீர்திருத்தங்களுக்கான அத்திபாரமாக அமைந்தது.

சிவில் சமூக முன்முயற்சிகள், இனங்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தை மற்றும் உரிமைகளுக்கான ஆதரவுப் பிரசாரம் ஆகியவை அதிகாரப் பகிர்வு, சமஷ்டி முறை மற்றும் போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் போன்ற சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் பற்றி பொதுமக்கள் மத்தியில் பெருமளவுக்கு விளக்கத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்பைச் செய்திருக்கின்றன. சந்திரகாசனின் அமைப்பு குறித்து தெரிவித்த பாராட்டை அரசாங்கம் நாட்டில் இனங்கள், மதங்களுக்கு இடையில் நிலவும் நம்பிக்கையின்மையை இல்லாமல் செய்வதற்கும் சமூக ஒருங்கிணைவை ஏற்படுவதற்கும் தங்களை அர்ப்பணித்திருக்கும் ஏனைய அரசாங்க சார்பற்ற தொண்டர் அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தினால் நன்றாக இருக்கும்.

நெருக்குதல்கள் தொடர்ந்து வளர்ந்து வந்தாலும் கூட, அநாவசியமான தாமதமின்றி நல்லிணக்கத்தில் ஈடுபட வேண்டியது அரசாங்கத்துக்கு ஒரு சவாலாக இருக்கிறது. ஒவ்வொன்றாக நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானதே, ஆனால், காலவரையறையற்ற ஒத்திவைப்பு ஆபத்தைக் கொண்டுவரும். மோதல் தீர்வுக்கான இந்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தத் தவறினால், இன்னொரு சந்தர்ப்பம் மீண்டும் கிடைப்பதற்கு நீண்டகாலம் எடுக்கக் கூடும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தடுமாறுகிறது தமிழ் அரசியல்!

பனங்காட்டான்

# தள்ளாடுகிறது தமிழரசு!

சிங்களதேசத்தின் மூத்த இரண்டு கட்சிகளும் அவர்களுக்கு வாக்களித்த மக்களாலேயே காணாமலாக்கப்பட்ட வரலாற்றை முன்னர் ஒருதடவை இங்கு எழுதியிருந்தேன்.

ஐக்கிய தேசியகட்சியும், சிறீலங்கா சுதந்திரகட்சியுமே சிங்கள தேசத்தின் ஆதிக்கட்சிகள். இவர்களுக்கு ஏற்பட்ட கதி எவரும் எதிர்பார்க்காதது. ரணில் விக்கிரமசிங்க எழுபத்தைந்து வயதைத் தாண்டியும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைக் கதிரையை விட்டுக்கொடுக்காது கட்டிப்பிடித்திருக்கிறார். சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் யார் என்பது பலருக்கும் தெரியாமல் இருக்கிறது. சந்திரிகா குமாரதுங்க தான் இப்போதும் தலைவராக இருப்பதாகபலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்விரு கட்சிகளையும் ஓரந்தள்ளி விட்டு ஜே.வி.பி.,தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் ஆட்சியைக் கைப்பற்றி இரண்டாவது ஆண்டு பூர்த்தியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. சிறீமாவோ அரசினாலும் (1971),ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசினாலும் (1987-1989) முத்திரை குத்தப்பட்ட ஜே.வி.பி.,முன்னைய இரண்டு கட்சிகளை மட்டுமன்றி மகிந்தவின் பொதுஜன பெரமுனவையும் வீழ்த்தி விட்டு ஆட்சியில் அமர்ந்துள்ளது.

நெருக்கடியானவளைகுடாயுத்த வேளையில் இந்தியா, சீனா, ரஷ்யா மட்டுமன்றி ஈரானும் கூட இவர்களுக்கு சகல உதவிகளையும் வழங்க முன்வந்திருப்பதை பார்க்கமுடிகிறது. ஊழல், அதிகார துஸ்பிரயோகம் என்பதற்கு அப்பால் நல்லுறவு என்ற ஒற்றை வார்த்தை அநுர அரசுக்கு சாதகமாக அமைந்துள்ளது.

இதனூடாக தமிழர் தேசிய அரசியலை நோக்கும்போது அதன் போக்கு தமிழ் மக்களின் நலனில் அக்கறைகாட்டுவதை விட தங்களுக்குள் பிசகுப்பட்டு கழுத்தறுப்புகள் நடத்துவதிலேயே காலத்தைக் கடத்துவதை காணமுடிகிறது.

ஐக்கிய் தேசிய கட்சியும் சிறீலங்கா சுதந்திர கட்சியும் எவ்வாறு சிங்கள தேசத்தின் மூத்தகட்சிகளாகப் பார்க்கப்படுகின்றனவோ அந்தப் பாரம்பரியம் தமிழரசுக் கட்சிக்கும் உண்டு. தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்தவர்களால் உருவாக்கப்பட்டது தமிழரசுக் கட்சி. தேர்தல் திணைக்களப் பதிவில் இலங்கை தமிழரசுக் கட்சி என்றும்,தமிழ் மக்கள் மத்தியில் சமஷ்டிக் கட்சி என்றும் பெயர் சூட்டப்பட்டதற்கு அரசியல் காரணம் உண்டு.

இது உருவாக்கப்பட்ட காலத்தில் அதன் கொள்கையால் மக்கள் ஆதரவு இதன் பலமாகியது. ஆனாலும் தமிழ் காங்கிரஸை முழுமையாக அழித்து விட முடியவில்லை. 1970 பொதுத்தேர்தலில் தமிழரக் கட்சியின் அ.அமிர்தலிங்கமும், தமிழ் காங்கிரஸின் மு.சிவசிதம்பரமும் தோற்கடிக்கப்பட்டதால் தமிழர் ஐக்கிய முன்னணி உருவாகியதாக வரலாறு கூறுகிறது. இதுவே பின்னாளில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாகி, தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து அதிகூடிய ஆசனங்களை வடக்கு கிழக்கில் பெற்றது. இதன் பின்னரான நிகழ்வுகள் சரித்திர பாடமாகியுள்ளது.

தொடர்ச்சியான அனைத்து மாற்றங்களையும் காலத்தின் தேவையாக மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதேசமயம் தமிழ் மக்கள் மத்தியில் பிளவுகள் அதிகமாகி கொள்கைப்பற்று சிதறுண்டுபோன வேளையில் அனைத்துத் தமிழ் கட்சிகளையும் ஆயுதக்குழுக்களையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவரவேண்டிய தேவை உருவானது. விடுதலைப் போராட்டத்துக்கு தலைமை தாங்கிய விடுதலைப் புலிகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் இதனை வெற்றிகரமாக நிறைவேற்றினர். தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற கட்சி என்ற வகையிலும் அதன் சின்னமான வீடு கூட்டமைப்பின் சின்னமாக்கப்பட்டதாலும் தமிழரசுக் கட்சிக்கு கூட்டமைப்பின் நாடாளுமன்றத் தலைமைத்துவம் கிடைத்தது.

2009ல் முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதால் கூட்டமைப்பு மெதுமெதுவாக பிளவடைய ஆரம்பித்தது. அதன் பின்னரான சகல தேர்தல்களும் இந்தப் பிளவை வெளிப்படையாகத் தெரியவைத்தன. எனினும், வெற்றிபெற்ற





> தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது தெரியாது தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. உட்கட்சிமோதல், பதவி மோகம், குழிபறிப்பு என்பவைகளால் தள்ளாடிக் கொண்டிருக்கிறது தமிழரசுக் கட்சி. சிங்களதேசத்தில் நிகழ்ந்த அதிரடி அரசியல் மாற்றம் தமிழ் மண்ணில் எப்போது சாத்தியமாகும்?

ஆசனங்களின் எண்ணிக்கையில் தமிழரசே முன்னணியில் நின்றதால் அதன் தலைமைத்துவம் மாற்றமின்றித் தொடர்ந்தது.

தமிழர் தேசத்தின் இன்றைய அரசியல் நிலைமை அவ்வாறே இருக்கிறதா? தமிழரசுக் கட்சிஅந்தத் தலைமைப் பதவியை தொடர்ந்தும் தக்கவைக்கும் தகுதியில் இருக்கிறதா? அண்மையில் நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகளும், அதன் பின்னரும் முன்னருமான தேர்தல் கூட்டுகளும் அவ்வாறான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவில்லையென்றே கூற வேண்டும்.

தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பதவிப் போட்டிகளும், கழுத்தறுப்புகளும் இதற்கான முதற்காரணமாக அடையாளம் காணப்படுகிறது. இறுதியாக, இடம்பெற்ற பொதுத் தேர்தலிலும் அதன் பின்னரான தமிழரசுக் கட்சியின் தலைவர் போட்டியிலும் சுமந்திரனுக்குக் கிடைத்த தோல்வியே கட்சியை இன்றைய தேக்க நிலைக்கு அல்லது மீளமுடியாத நெக்கடிக்குள் சென்றுகொண்டிருப்பதற்கு முக்கியமான காரணம் என்பதை கட்சிப் பிரமுகர்களே ஒப்புக் கொள்கின்றனர்.

சுமந்திரனையும் சிவஞானம் சிறீதரனையும் ஒன்றிணைக்க முடியாதவரை தமிழரசுக் கட்சி பிளவுண்ட நிலையிலேயே செல்லுமென உள்வீட்டுக்காரர்கள் ஏற்றுக் கொண்டாலும் சகஜ நிலைமையை ஏற்படுத்துவதில் எவருமே வெற்றிகாணும் நிலைதென்படவில்லை. உருவாகியுள்ள பதவி மோகப் பிரச்சனையை தீர்த்து கட்சியை நேர்த்தியாகக் கொண்டு செல்லவேண்டிய பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இவ்விடயத்தில் அக்கறை காட்டுவதாக இல்லையென்ற குறைக்கப்பால், சுமந்திரன் பக்கமாகவே இவர் சாய்ந்திருப்பதான ஒரு குற்றச்சாட்டு பொதுவெளியில் உண்டு. எல்லாம் நியதிப்படி நடைபெறும் என்பது இவரது போக்கு இப்போதைய கட்சிப் பிரச்சனைக்கு தீர்வாக அமையாது என்பதை அன்றாட நிகழ்வுகள் காட்டிநிற்கின்றன.

கட்சியை முழுமையாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் சுமந்திரன் தீவிரமாக உள்ளார். அதற்கு ஏதுவாக அவரது அன்றாடசெயல்பாடுகள் காணப்படுகின்றன. கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவராகவிருந்த சிறீதரன் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டபின், சுமந்திரனின் நெருக்கமான சகாவான சாணக்கியன் அப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். சாணக்கியன்றி மோட்டில் இயங்குவதாக பரவலாக சொல்லப்படுகிறது. இதில் உண்மையில்லாமல் இல்லை.

கொழும்பிலுள்ள கனடிய தூதுவரை சாணக்கியன் அண்மையில் தனிமையில் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பு அவரது தனிப்பட்ட முறையிலானது என்று வெளியில் பகிரப்பட்டது. கட்சியின் நாடாளுமன்ற குழுத்தலைவராக இருப்பவர் ஒரு வெளிநாட்டுத் தூதுவரை சந்திப்பது எவ்வாறு தனிப்பட்ட சந்திப்பாக இருக்கமுடியும்? இதனை ஒரு தனிப்பட்ட சந்திப்பென்று முற்கூட்டியே அறிவித்திருந்தால் வெளிநாட்டுத் தூதுவர் இவரை சந்தித்திருப்பாரா? சிலவேளை சிறீதரன் இவ்வாறான ஒரு சந்திப்பை நடத்தியிருந்தால் அவர் மீது கேள்விக் கணை தொடுக்கப்பட்டிருக்கும். ஆனால் சாணக்கியனுக்கு....

வளைகுடா யுத்தம் தொடர்பாக அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவித்து பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியது. இது தொடர்பாக விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்போம் எனபதில் செயலாளர் சுமந்திரன் அறிவித்துள்ளார். வளைகுடா யுத்தம் ஆரம்பமாகி இரண்டு வாரங்களின் பின்னரே பச்சிலைப் பள்ளிபிரதேச சபை தனது தீர்மானத்தை எடுத்தது. தமிழ் மக்களின் தலையாய கட்சி என்று தன்னை அழைத்துக் கொள்ளும் தமிழரசுக் கட்சியுத்தம் ஆரம்பமாகி இரண்டு வாரங்களாகியும் தனது நிலைப்பாட்டை அறிவிக்காதது யாருடைய தவறு? கட்சி தனது முடிவை ஏற்கனவே அறிவித்திருந்தால் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை தனது நிலைப்பாட்டை தவிர்த்திருக்கலாம் தானே.

ஓர் அரசியல் அமைப்பு என்பது எப்போதும் கூடுதலானவர்களை அரவணைத்து கட்சியை வளர்த்துச் செல்வதாக இருக்கவேண்டும். கட்சிக்குள் தீர்க்கப்படவேண்டிய விடயங்களை பெரிதாக்கி ஊடகங்கள் ஊடாக அறிக்கை விடுத்து, உறுப்பினர்களிடம் விளக்கம் கோருவதும், உறுப்புரிமையை இடைநிறுத்தம் செய்வதும் கட்சியை சீரழித்து அழிப்பதாகவே அமையும். இதனையே தற்போதை தமிழரசின் தலைமைத்துவம் தனது தலையாய பணியாக செய்துவருகிறது.

இன்னொரு விடயம் முக்கியமானது. திருமலை புத்தர்சிலை விடயத்தில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கொண்ட நிலைப்பாடு தமிழர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது என்று தமிழரசுக் கட்சி அவருக்கு தெரிவித்துள்ளது. அதாவது, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தை தமிழரசுக் கட்சி பகிரங்கமாக ஆதரித்து பரப்புரை செய்ததால் அவரது செயற்பாடு தமிழர்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்திவிட்டதென்பது இதன் அர்த்தம். அதனால் சஜித் தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோரவேண்டுமென தமிழரசுக் கட்சிகோரியுள்ளது.

இது நியாயமான கோரிக்கை. அதற்கு முன்னர், ஆயிரம் விகாரைகளை வடக்கில் அமைப்பேன் என்று கூறிய சஜித் பிரேமதாசவை ஜனாதிபதி தேர்தலில் ஆதரித்ததற்காகவும், தமிழ் மக்கள் அவருக்கே வாக்களித்துஅவரைவெற்றிபெறச் செய்யவேண்டுமென்றுகோரியதற்காகவும்,தமிழ் மக்களின் ஜனாதிபதிவேட்பாளராகபோட்டியிட்டஅரியநேத்திரனைதோற்கடிக்கவேண்டுமெனபகிரங்கமாகவேண்டியதற்காகவும் தமிழரசுக் கட்சியும் சுமந்திரனும் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்பதை ஏனோ இவர்கள் மறந்துவிட்டார்கள்.


தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு பற்றி பேசித் தீர்ப்பதற்காக இராப்போசனத்துக்கு வருமாறு தமிழரசுக் கட்சியினரை சஜித் பிரேமதாச அழைத்திருப்பதாகவும் அதனை தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் இன்னொரு செய்தி சொல்கிறது. 'நக்குண்டார் நாவிழந்தார்' என்பதை தலைமைக் கட்சிக் காரர்கள் நினைவில் கொண்டு செயற்பட வேண்டியது அவசியம். இல்லையேல் இராப்போசனத்துக்காக இன்னொரு நாளில் தமிழ் மக்களிடம் தமிழரசுக் கட்சி மன்னிப்புக்கோரநேரிடலாம்.

மொத்தத்தில் ஒருவிடயம் பளிச்செனவே தெரிகிறது. தமிழ்த் தேசிய அரசியல் திசைதெரியாது தடுமாறிக் கொண்டிருக்கிறது. இதன் தலைப்பனான தமிழரசுக் கட்சி தள்ளாடிக் கொண்டிருக்கிறது. சிங்கள தேசத்தில் நிகழ்ந்த அதிரடி அரசியல் மாற்றம் தமிழ் மண்ணில் எப்போது சாத்தியமாகும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஜே.வி.பி ஒரு கட்சி ஆட்சியை நோக்கி நகர்கின்றதா?

யதீந்திரா



> வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் மனதை வெற்றிகொண்டால் அதிகாரப்பகிர்விற்கான தேவையை இல்லாமலாக்கிவிடலாம் என்று அவர்கள் எண்ண வாய்ப்புண்டு. ஒரு அரசியல் கட்சி என்னும் வகையில், அதற்கான முயற்சிகளை அவர்கள் செய்யாமல் இருக்க வேண்டுமென்று, தமிழ் கட்சிகள் எதிர்பார்க்க முடியாது. அதில் அவர்கள் வெற்றிபெற்றால் அது அவர்களின் கெட்டித்தனம் . அதனை தடுத்து நிறுத்தி, தமிழ் மக்களை தங்களின் பக்கமாக அணிதிரட்டுவது தமிழ் கட்சிகளின் வல்லமை.

ஜே.பி.வி ஒரு கட்சி ஆட்சியை நோக்கி நகர்கின்றது - இப்படியானதொரு பார்வை சிலரிடம் உண்டு. இவ்வாறான வாதம் தென்னிலங்கையிலிருந்து வருவதை விடவும் வடக்கிலிருந்துதான் வருகின்றது. இலங்கை தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றார். அவர் இந்தக் குற்றச்சாட்டை பதுடில்லியில் வைத்து முன்வைத்திருப்பது கூடுதல் அரசியல் முக்கியத்துவம் உடையது. இந்திய சட்டத்தரணிகள் சங்கத்தின் நிகழ்வு ஒன்றிற்காக சென்றிருந்தவர், இந்திய பத்திரிகையாளர் நாராயண சுவாமிக்கு நேர்காணல் ஒன்றை வழங்கியிருக்கின்றார். இதன் போதே, மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றார்.

சுவாமியின் கட்டுரையின் படி, தற்போது ஆட்சியிலிருக்கும் மாக்ஸ்சிஸ்ட் கட்சியான தேசிய மக்கள் சக்தியானது, இலங்கையை ஒரு கட்சி ஆட்சியை நோக்கி கொண்டுசெல்லும் ஆபத்து காணப்படுகின்றது - சுமந்திரனின் பார்வையில், அரசாங்கமானது, தமிழ் மக்கள் பெரும்பாண்மையாக வாழும் வடக்கில், தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு, (அரச கட்டமைப்புக்களுக்கு மாறாக) பிரஜா சக்தி என்னும் பெயரில், சமாந்தரமான அதிகார கட்டமைப்பை உருவாக்கிவருகின்றது. நடைமுறையில் இருக்கின்ற நிறுவனங்கள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோர்களை ஓரங்கட்டும் நோக்கிலேயே இந்த விடயம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த அடிப்படையில் மேலும் பல விடயங்களை சுமந்திரன் குறித்த நேர்காணலில் பகிர்ந்து கொண்டிருப்பதாக நாராயண சுவாமியின் கட்டுரை நீள்கின்றது. இந்த சம்பாசனையின் போது, 1971இல், இலங்கை தமிழரசு கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் - நாங்களும் சோசலிசத்தை ஆதரிக்கின்றோம் ஆனால் நாங்கள் ஒரு கட்சி ஆட்சியை ஆதரிக்கமாட்டோம் என்று கூறியதாகவும் பதிவு செய்திருக்கின்றார்.

இதன் மூலம், ஜே.வி.பி ஒரு கட்சி ஆட்சியை நோக்கிச் செல்ல முற்படுகின்றது ஆனால் நாங்கள் (தமிழர்கள்) அதற்கு எதிராக நிற்போம் என்பதையே சுமந்திரன் அழுத்திக் குறிப்பிட முயற்சித்திருக்கின்றார்.

சுமந்திரன் எதிர்கட்சியை சேர்ந்த ஒருவர் அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில், ஜே.வி.பி ஊடுருவலை எதிர்க்கும், தமிழ்த் தேசிய கட்சிப் பின்புலத்தைக் கொண்ட ஒருவர் - எனவே அவர் ஜே.வி.பியின் மீது முன்வைக்கும் விமர்சனங்களை தர்க்கரீதியில் ஆராய்வதுதான் சரியானது. தர்க்கரீதியில் விடயங்களை ஆராயும் போக்கு தமிழ் அரசியல் உரையாடல்களில் மிகவும் குறைவு.

ஜே.வி.பியின் மீதான சந்தேகப் பார்வைக்கு அடிப்படையான காரணம் அவர்களுடைய கடந்த காலமாகும். ஜே.வி.பி அடிப்படையில் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டு அரசியல் பிரவேசம் செய்த ஒரு அமைப்பு அல்ல. ஆயுதப் புரட்சி ஒன்றின் ஊடாக இலங்கையின் ஒட்டுமொத்த அதிகாரத்தையும் கைப்பற்றலாம் என்று நம்பி, அதற்காக இரண்டு முறை முயற்சித்து, தோல்வியுற்ற அமைப்பு. அவ்வாறு நம்பிய காலத்தில், அவர்களது எண்ணத்தில் இருந்தவை ஜனநாயக நாடுகள் அல்ல மாறாக சர்வாதிகார சீனா, கியுபா போன்ற நாடுகள்தான்.

அவ்வாறான நாடுகள் அனைத்துமே ஒரு கட்சி ஆட்சி யைக் கொண்டிருக்கும் நாடுகள். ஆனால் ஜே.வி.பியால் ஆயுதப் புரட்சியில் வெற்றிபெறமுடியவில்லை . மாறாக மிகவும் மோசமாக அழிக்கப்பட்டனர். ஒட்டுமொத்த இலங்கையை ஆயுதப் புரட்சியின் மூலம் கைப்பற்றலாம் என்பது ஒரு பகவல் கனவு என்பதை அவர்கள் பின்னர் உணர்ந்து கொண்டனர். ஏனெனில் அதற்கான வாய்ப்பை இந்தியாவின் உடனடி அயல்நாடு என்னும் தன்மை அனுமதிக்காது.

ஆயுத அரசியல் தோல்வியில் கிடைத்த படிப்பினையின் அடிப்படையிலேயே ஜனநாயகப் பாதைக்கு திரும்பினர். ஒரு வேளை ஜே.வி.பி ஆயுதப் புரட்சியில் வெற்றிபெற்றிருந்தால் இலங்கைத் தீவில் ஒரு கட்சி ஆட்சியைத்தான் நிறுவியிருக்க முயற்சித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தேர்தலை வேண்டுமானால் ஒரு சம்பிரதாயமாக பின்பற்றியிருக்கலாம். அல்லது எதிர்கட்சிகள் மிகவும் பலவீனமாக இருக்கும் அரசியல் சூழலொன்றை ஏற்படுத்தியிருக்கலாம். ஏனெனில், புரட்சிகர ஜே.வி.பியின் காலகட்டம் என்பது எதிரணி அரசியல் கட்சிகளையும் புத்திஜீவிகளையும் இந்திய ஆதரவாளர்களையும் ஆயுத முனையில் இலக்கு வைத்த காலம்தான்.

இதில் மறைக்க ஒன்றுமில்லை. இந்த விடயங்கள் எவற்றுக்காகவும் தாங்கள் வருந்த வேண்டிய அவசியமில்லை என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அண்மைய நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருக்கின்றார். அவர் நியூட்டனி விதியை நினைவுபடுத்துகின்றார் அதாவது ஒவ்வொரு செயலுக்கும் அதற்கு சமாந்தரமான எதிர்த்தாக்கம் உண்டு. ரில்வினின் பார்வையில் ஜே.வி.பி செயலாற்றவில்லை - மாறாக, செயலுக்கு எதிர்வினையாற்றியது. அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகள்தான் தங்களுடைய எதிர்வினைகளுக்கு காரணம். ஐக்கிய தேசியக் கட்சி அவர்களுடைய செயல்களுக்கு வருந்தாத போது, நாங்கள் எதற்காக வருந்த வேண்டும் என்பது ரில்வினின் வாதம். தர்க்கரீதியில் வாதம் சரியானதுதான் ஆனால் இதே தர்க்கம் விடுதலைப் புலிகளுக்கும் பொருந்தும் - இந்தியத் தலையீட்டுக்கும் பொருந்தும் - ஏன் அனைத்து கடந்த கால செயற்பாடுகளையும் நியூட்டனின் விதியைக் கொண்டு நியாயப்படுத்தலாம்.

ஜே.வி.பியின் அரசியல் அணுகுமுறைகள் தொடர்பில் சந்தேகம் எழுவதற்கான அடுத்த காரணம், அவர்களுடைய கடந்த கால அரசியல் கருத்தியல் நிலைப்பாடு. ஆரம்பகால ஜே.வி.பிக்கு சீனாவின் மீது ஒரு ஈர்ப்பிருந்தது. இந்தப் பின்புலத்திலிருந்துதான் அவர்களுடைய இந்திய எதிர்ப்பு அரசியல் நிலைப்பாடும் கருக்கொண்டது.

ஜே.வி.பியின் பிரபல மான ஐந்து அரசியல் வகுப்புக்களில் இந்திய விஸ்தரிப்பு வாதமும் ஒன்று. ஜே.வி.பியின் இவ்வாறான பின்னணியை மனதில் இருத்தி சிந்தித்தால், ஜே.வி.பி ஒரு வேளை ஒரு கட்சி ஆட்சியை நோக்கித்தான் நகர்கின்றதோ என்று சந்தேகம் எழுவது இயல்பானதுதான். ஆனால் இலங்கைத் தீவில் ஒரு கட்சி ஆட்சியை ஏற்படுத்துவது சாத்தியமான ஒன்றா என்னும் கேள்விலிருந்து நோக்கினால், ஜே.வி.பி அப்படியானதொரு முயற்சியில் அதன் ஆற்றலை செலவிட முயற்சிக்குமா என்னும் கேள்விதான் யதார்த்தமானதாகத் தெரிகிறது. ஏனெனில் இலங்கை அரசியல் கலாசாரம், குறிப்பாக தென்னிலங்கை அதற்கு இடம்கொடுக்கக் கூடிய ஒன்றல்ல. எனவே தங்களுடைய கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்ளும் எண்ணத்திலிருக்கும் இன்றைய ஜே.வி.பியானது, இவ்வாறான விசப்பட்சையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு என்பதே எனது பார்வை. மேலும் ஒரு வேளை உண்மையிலேயே ஜே.வி.பிக்கு அவ்வாறான எண்ணம் இருந்தாலும் கூட, அதனை எவ்வாறுநடைமுறைப் படுத்துவது? ஆனால் எதிர்க்கட்சிகள் மிகவும் பலவீனமாக இருக்கக் கூடிய அரசியல் சூழலொன்றை ஏற்படுத்துவதில் ஜே.வி.பி அக்கறை செலுத்த முடியுமென்றால் அதற்கு வாய்ப்புண்டு.

மகிந்த ராஜபக்சவின் காலத்திலும் இவ்வாறானதொரு சூழல் தென்பட்டது. அந்த வேளையில், இலங்கையின் அரசியல் தென்கிழக்காசிய அரசியல் பாதையை நோக்கி நகர்கின்றதா என்னும் கேள்வியும் முன்வைக்கப்பட்டது. மகிந்த ராஜபக்சவின் சீன சார்ப்பு நிலைப்பாட்டின் மீதான பார்வையிலிருந்தே இவ்வாறான கேள்வி எழுந்தது.

விடயங்களை ஆழமாக நோக்கினால், பாராளுமன்ற பெரும்பாண்மையை அடையும் சந்தர்பங்களில்தான் எதிரணிகள் பலவீனமடைகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில்தான், ஆட்சியாளர்கள் தாங்கள் எண்ணுவதை முன்னெடுக்க முயல்கின்றனர். இலங்கை அரசியலில் இந்த நிலைமையை முதலில் ஏற்பட்டது ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசி யக் கட்சிக் காலத்தில்தான். ஜெயவர்த் தன தன்னிடமிருந்த பாராளுமன்ற பெரும்பாண்மையின் அடிப்படையில் தான் தான் விரும்பியவாறு இலங்கையின் அரசியலை முன்னெடுத்தார். அரசியலமைப்பை மாற்றினார். அவரது வார்த்தையில் கூறுவதானால் அவரால், ஆணை பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாது என்பதைத் தவிர, அனைத்து அதிகாரங்களும் இருந்தன. எதிர்கட்சிகள் மிகவும் பலவீனமடைந்த நிலையில்தான் அது சாத்தியப்பட்டது. ஜே.ஆர்.ஜெயவர்த் தன மார்க்சிய கட்சிக்கு தலைமை தாங்கவில்லையே! எனவே இங்கு பாராளுமன்ற பொரும்பான்மையை தங்களுடை கட்சி நலனுக்கு பயன்படுத் திக் கொள்ளும் எண்ணத்திற்கு முன்னால் - இடதுசாரி, வலதுசாரி என்னும் பாகு பாடுகள் இல்லை. இந்த விடயங்களை சுமந்திரனால் ஆழமாக புரிந்து கொள்ள முடியாது போயிருக்கலாம்.

சுமந்திரன் ஒரு தமிழ் அரசியல்வாதியாக இந்த விடயத்தை முன்வைத்திருப்பதால் இன்னொரு விடயமும் இந்த இடத்தில் குறுக்கிடுகின்றது. ஒரு வேளை விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்தத்தில் வெற்றிபெற்று, ஒரு தனிநாடு உருவாகியிருந்தால் அந்த நாட்டில் ஒரு கட்சி இருந்திருக்குமா அல்லது பல கட்சிகள் இருந்திருக்குமா? விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் ஆரம்பத்தில், யூகோஸ்லாவிய வகைப்பட்ட ஒரு கட்சி சர்வாதிகாரம் பற்றி பேசிய பதிவும் உண்டு. இது பல இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதே வேளை புரட்சிகர சோசலிசம் பற்றியும் அவர் பேசியிருக்கின்றார்.

பொதுவாக ஒரு ஆயுதப் பேராட்டத்தில் வெற்றி பெற் றால் அதன் பின்னரான ஆட்சி யென்பது பெரும்பாலும் அவர்களுடைய ஏகபோகமாகத்தான் இருக்கும். ஜே.வி.பியும் விடுதலைப் புலிகளும் அடிப்ப டையில் ஒரு கட்சி அல்லது ஒரு இயக்க மேலாதிக்க சிந்தனையினால் வழி நடத்தப்பட்டவர்கள் தான். இந்தப் பின்பு லத்தில் நோக்கினால், இலங்கைத் தீவில் தோன்றிய இரண்டு பக்க ஆயுதக் கிளர்ச்சி இயக்கங்களுமே ஜனநாயக அடிப்படையைக் கொண்டவர்கள் அல்லர் - ஆயுத வழிமுறையின் வெற்றி எப்போதும் பல்கட்சிக்கான கதவை இழுத்து மூடிவிடும்.

ஆனால் ஜே.வி.பியின் கடந்த காலத்தைக் கொண்டு அவர்களது இன்றைய ஜனநாயாக அரசியலை எடைபோட முடியாது. ஒரு வேளை எதிர்கட்சிகள் பலவீனமாக இருக்கக் கூடிய ஒரு அரசியல் சூழலில்தான், அவர்களது கனவுத் திட்டங்களை மேற்கொள்ள முடியுமென்று அவர்கள் நம்பினால், அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புண்டு.

ஆனால் வடக்கு கிழக்கில் அவர்களது அணுகுமுறைகளை அடிப் படையாகக் கொண்டு ஒட்டுமொத்த நாடு முழுவதும் அதனை பயிற்சிசெய் வார்கள் என்று கருத முடியாது.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் மனதை வெற் றிகொண்டால் அதிகாரப்பகிர்விற்கான தேவையை இல்லாமலாக்கிவிடலாம் என்று அவர்கள் எண்ண வாய்ப்புண்டு. ஒரு அரசியல் கட்சி என்னும் வகையில், அதற்கான முயற்சிகளை அவர்கள் செய்யாமல் இருக்க வேண்டுமென்று, தமிழ் கட்சிகள் எதிர்பார்க்க முடியாது. அதில் அவர்கள் வெற்றிபெற்றால் அது அவர்களின் கெட்டித்தனம் . அதனை தடுத்து நிறுத்தி, தமிழ் மக்களை தங்களின் பக்கமாக அணிதிரட்டுவது தமிழ் கட்சிகளின் வல்லமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒரு கொலையும் யாழ்ப்பாணத்தவரின் பயங்களும்



நிலாந்தன்

சித்த மருத்துவத்துறை விரிவுரையாளரின் கொலைச் சம்பவம் ஒரு தனிப்பட்ட குற்றச்செயலா? அல்லது பொதுவான சமூகப் பிறழ்வின் குறிகாட்டியா?

கொல்லப்பட்டவர் ஒரு மருத்துவர், விரிவுரையாளர் என்பதும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், அந்தச் சம்பவம் அதிகம் கவனிப்பைப் பெறக் காரணம். அவர் ஒரு படித்த தாய். பிள்ளையும் யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பாடசாலையில் படித்திருக்கிறார். ஒரு படித்த தாய்,பதின்ம வயதிலும் அதன் பின்னரும் பிள்ளையை வெற்றிகரமாகக் கையாள முடியாமல் போனது அவருடைய தனிப்பட்ட தோல்வியா? அல்லது நடப்பில் உள்ள கல்வி முறையின் தோல்வியா?

இக்கேள்விகளுக்கான விடைகளைத் தேடுவதாக இருந்தால் ஒரு குற்றச் செயல் மட்டும் போதாது.ஒரு குறிப்பிட்ட கால கட்டத்துக்குள் நிகழ்ந்த குற்றச் செயல்களைத் தொகுத்து ஆராய வேண்டும். பொருத்தமான புள்ளி விபரங்களைத் தொகுத்தும் பகுத்தும் கிடைக்கும் முடிவுகளின் அடிப்படையில் அது ஒரு சமூகப் பொதுத் தோறப்பாடா? இல்லையா? என்ற முடிவுக்கு வர வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் படித்த கல் வீட்டுக்காரர்கள் அதிகமாக சிசிடிவி கமராவை வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் பொருத்தி வைத்திருக்கிறார்கள். குற்றச் செயல்களையும் திருடர்களையும் கண்காணிப்பதற்கு கமராவை பொருத்தும் ஒரு சமூகம், தங்கள் வீட்டுக்குள் தங்கள் கண் முன்னே வளரும் பிள்ளைகளை தொடர்ச்சியாகக் கண்காணிக்கின்றதா? பிள்ளைகளை தொடர்ச்சியாகக் கண்காணிக்கும் பெற்றோரும் மூத்தவர்களும் பிள்ளைகளிடம் ஏற்படும் மாற்றங்களை உடனடியாகக் கண்டு கொள்வார்கள். பிள்ளைகளைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கத் தவறும் பெற்றோரே பிள்ளைகளைத் தவறவிடுகிறார்கள்.பெரும்பாலான படித்த வசதியானவர்கள் வீடுகளில் கமராவைப் பொருத்தும் ஒரு சமூகத்தில் பிள்ளைகளைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்க முடியாமல் போவது ஏன்? பிள்ளைகளைக் கண்காணிப்பதற்கு கமராவைப் பொருத்தும் பெற்றோரும் உண்டு. ஆனால் கமராவால் மட்டும் பிள்ளைகளைக் கண்காணிக்க முடியாது. அன்பினால்தான், பாசத்தால்தான், அறிவினால்தான் பிள்ளைகளைப் பின்தொடரலாம் கண்காணிக்கலாம். ஒரு பகுதி படித்த பெற்றோராலேயே ஏன் பிள்ளைகளைக் கண்காணிக்க முடியாமல் போகிறது?

இக்கட்டுரையாளர் யாழ்ப்பாணத்தில் கிராம மட்டங்களில் நடக்கும் சந்திப்புகளின்போது ஒரு கேள்வி கேட்பார்.உங்களில் எத்தனை பேரிடம் கைபேசிகள் உண்டு? எல்லாருமே உண்டு என்று கூறுவார்கள். அதில் எத்தனை ஸ்மார்ட் கைபேசிகள்? என்று கேட்டால், அநேகமானவர்கள் தங்களிடம் இருப்பது அதுதான் என்று கூறுவார்கள். பின்னர் ஒரு கேள்வி “கைபேசியில் நீங்கள் சராசரியாக ஒரு நாளைக்கு எத்தனை மணித்தியாலங்கள் செலவழிப்பீர்கள்?” அதற்குக் கிடைக்கும் பதில் பெரும்பாலும் அதிர்ச்சியூட்டுவதாக இருக்கும்.ஆகக் குறைந்தது ஒரு மணித்தியாலமும் ஆகக்கூடியது 5 மணித்தியாளங்களும் என்று பதில் கிடைக்கும். அதை வைத்து மீண்டும் ஒரு கேள்வி. “அப்படியென்றால் கடந்த வாரம் முழுவதும் நீங்கள் கைபேசியில் இருந்து கற்றுக் கொண்ட ஒரு விடயத்தைச் சொல்லுங்கள்?அல்லது கைபேசியில் நீங்கள் பார்த்த, கேட்டவற்றுள் உங்களை மிகவும் பாதித்த, உங்களுடைய உணர்வில், சிந்தனையயில் மாற்றத்தை ஏற்படுத்திய ஒரு விடயத்தைச் சொல்லுங்கள்? என்று கேட்டால், அநேகமானவர்கள் பொருத்தமான பதிலைச் சொல்ல மாட்டார்கள். அரிதாகத்தான் நல்ல பதில் வரும்.

இது கிராமப்புறச் சந்திப்புகளின் போதும் அவதானிக்கப்பட்டது. நகர்ப்புறச் சந்திப்புகளின் போதும் அவதானிக்கப்பட்டது.படிப்பறிவு மட்டம் குறைந்தவர்கள் மத்தியிலும் அவதானிக்கப்பட்டது. அரசு அலுவலகங்களிலும் அவதானிக்கப்பட்டது. எனவே தொகுத்துப் பார்த்தால் படித்தவர், படிக்காதவர், வேலை செய்பவர்,வேலை செய்யாதவர், வசதியானவர், வசதி குறைந்தவர், என்ற வேறுபாடு இன்றி சமூகத்தில் அதிக தொகையினர் கைபேசிகளின் கைதிகளாகவே காணப்படுகிறார்கள்.

அவ்வாறு கைபேசிகளின் கைதிகளாகக் காணப்படுவோரிடம் மேலும் ஒரு கூர்மையான கேள்வி கேட்கப்படும்.

“நமது அரசியல்வாதிகள் தங்கள் கட்சிக்குள் வரும் விவகாரங்களையே தீர்க்க முடியாதவர்களாக, தங்களுடைய கட்சிக்காரனுக்கு எதிராகவே வழக்குப் போடுகிறவர்களாக, தங்கள் கட்சியைக் கொண்டுபோய் நீதிமன்றத்தில் நிறுத்துகிறவர்களாகக் காணப்படும் ஒரு சமூகத்தில், குடும்பங்களுக்குள் வரும் முரண்பாடுகள், குற்றச்செயல்களாக விகார வளர்ச்சி அடைவதைத் தடுக்கும் விதத்தில் குடும்பத் தலைமைத்துவத்தின் முகாமைத்துவத் திறன்களைக் கட்டியெழுப்புவது யார்?”



“நீங்கள் சராசரியாக ஒரு மணித்தியாலத்தில் இருந்து ஐந்து மணித்தியாலங்கள் வரை கைபேசியோடு மினக்கெடுக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய வளரும் பிள்ளைகளின் கண்களைப் பார்த்து எத்தனை நிமிடங்கள் கதைக்கிறீர்கள்? உங்கள் வளரும் பிள்ளைகளைத் தொட்டு அரவணைத்து எவ்வளவு நேரம் உரையாடுகிறீர்கள்?உங்கள் பிள்ளைகளோடு நீங்கள் எத்தனை மணித்தியாளங்களைச் செலவழிக்கிறீர்கள்? இந்த கேள்விக்கு அவர்கள் கூறும் பதில் பெரும்பாலும் கைபேசியோடு அவர்கள் செலவழிக்கும் நேரத்தைவிட குறைவான நேரந்தான் தங்கள் பிள்ளைகளோடு அவர்கள் செலவழிக்கிறார்கள் என்பதாக இருக்கும்.

கைபேசி மட்டுமல்ல, தொலைக்காட்சியும் ஒரு நேரம் தின்னிதான். வீட்டில் இருப்பவர்கள், வயோதிபர்கள்,குடும்பப் பெண்கள் தொலைக்காட்சியோடு கண்ணை ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருந்து அவர்கள் கற்றுக் கொள்வது பெரும்பாலும் முற்போக்கானது அல்ல.பெரும்பாலான தொலைக்காட்சி சீரியல்கள் அவர்களுக்கு எதைக் கற்றுக் கொடுக்கின்றன?தொகுத்துப் பார்த்தால் பெரும்பாலான திரைத் தொடர்களில் பெண்கள்தான் சூழ்ச்சிகள், சதிகள் நிறைந்த தந்திரசாலிகள்.மேலும்,ஒரு ஆணுக்கு இரண்டு பெண்கள் ஆசைப்படுவார்கள். அந்த ஆண் ஒரு நாகமாக இருந்தால் இரண்டு பெண் நாகங்கள் ஆசைப்படும். இப்படிப்பட்ட திரைத் தொடர்களில் இருந்து முற்போக்கான விடையங்களை, பெண் விடுதலையை, சமூக விடுதலையை, கற்றுக்கொள்ள முடியாது. பெண்கள் பெண்களுக்கு எதிராக எப்படிச் சூழ்ச்சிகள் செய்வது என்று வேண்டுமானால் கற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு கைபேசிகளோடும் தொலைக் காட்சிகளோடும் தம் பொழுதைப் போக்கும் பெற்றோரும் முதியோரும் அதே அளவு நேரத்தை பிள்ளைகளோடு செலவழிக்கிறார்களா? கிராம மட்ட சந்திப்புகளில் உங்கள் வளர்ந்த பிள்ளைக்கு சாப்பாடு கொடுக்கும் போது பிள்ளைகளோடு கதைத்துக் கதைத்து உணவு பரிமாறுவீர்களா? பிள்ளையின் கண்களைப் பார்த்து உரையாடுவீர்களா? என்று கேட்டால், கணிசமான தாய்மார் கூறுவார்கள், இல்லை பிள்ளைகளோடு ஒன்றாக இருந்து சாப்பிடும் சந்தர்ப்பங்கள் குறைவு என்று பிள்ளைக்கு சோலி அதிகம். பிள்ளையும் கைபேசியில் கண்ணை ஒட்டிக் கொண்டிருக்கும்.

மனிதர்கள் முன்னெப்பொழுதையும் விட பாரதூரமான விதத்தில் பொழுது போக்கிகளாக மாறிவிட்டார்கள்.பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே முதியோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே பொழுதுபோக்குச் சாதனங்கள் பெருகி விட்டன. கைபேசியின் கைதிகளும் தொலைக்காட்சியின் கைதிகளும் மெய்யான பொருளில் பிள்ளைகளை முழுமையாகக் கண்காணிப்பதில்லை.

போதைப்பொருள் பாவனை தொடர்பான கருத்தரங்குகளில், துறைசார்ந்த மருத்துவர்களும் நிபுணர்களும் கூறுவார்கள்,பிள்ளைகளின் கண்களை உற்றுக் கவனியுங்கள். அவை அசாதாரணமாகச் சிவந்திருக்கின்றனவா? பிள்ளையின் நடத்தைகளைப் பாருங்கள்.அது எங்கே போகிறது? எப்பொழுது வருகிறது? யாரோடு சேர்க்கிறது? யாரோடும் சேர்வதில்லை? என்பவற்றைக் கவனியுங்கள். அது நித்திரை கொள்கிறதா? இல்லையா? ஒழுங்காகச் சாப்பிடுகிறதா? ஒழுங்காக மலம் கழிக்கிறதா? ஒழுங்காகக் குளிக்கிறதா?ஒழுங்காக ஆடை உடுத்துகிறதா? என்று கவனியுங்கள். பிள்ளைகளின் கண்களில், நடத்தைகளில் ஏற்படும் மாற்றங்களைக் கவனியுங்கள்.பிள்ளைகளின் கைபேசிகளில் யார் யார் இருக்கிறார்கள்? யாரோடு கதைக்கும்போது பிள்ளை தனியே போகிறது? பிள்ளை அதிகம் தனிமையில் இருக்கிறதா? இல்லையா? என்று உற்றுக் கவனியுங்கள். தனிமையில் இருக்கும்பொழுது பிள்ளை என்ன செய்கிறது? என்று பாருங்கள். அதாவது ஒரு சிசிடிவி கமராவானது நடக்கும் சம்பவங்களைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பது போல பெற்றோரும் பிள்ளைகளை இடையறாது கவனிப்பார்களாக இருந்தால் ஒரு பிள்ளையும் பெற்றோரிடம் இருந்து தவறிப்போகாது.பிள்ளைகளைக் கையாள்வது பெற்றோருக்குப் பெரிய சவாலாகவும் இராது.

எனவே கைப்பேசிகளின் காலத்தில், பொழுதுபோக்குகளின் யுகத்தில், பெற்றோருடைய குடும்ப முகாமைத்துவத் திறன்களை அதிகப்படுத்த வேண்டியுள்ளது. பிள்ளை வளர்ப்புக்கான அறிவு சார்ந்த திறன்களை வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது. ஒரு குடும்பத்தின் கொள்ளளவை அறிவுபூர்வமாக, விஞ்ஞானபூர்வமாக, அதேசமயம் உணர்வுபூர்வமாகவும் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது.

அரசுசார்பற்ற நிறுவனங்கள் கிராம மட்டத்திலும் அலுவலகங்களிலும் நிறுவனங்களிலும் திறன்களைக் கட்டியெழுப்பும் கருத்தரங்குகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் நடத்துவதுண்டு. ஆனால் அரசுசார்பற்ற நிறுவனங்களால் அழைத்து வரப்படுகின்ற வளவாளர்களில் அநேகமானவர்கள் யாந்திரீகமானவர்கள். சமூகத்தை அதன் பண்பாட்டு அம்சங்களின் ஊடாக அணுக முடியாதவர்கள். பெரும்பாலான அரசசார்பற்ற நிறுவனங்களின் கொள்ளளவைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒரே மாதிரியானவை. அங்கேயே ஒரு யாந்திரீகப் பண்பு வந்து விடுகிறது. படைப்புத்திறன் இருக்காது. எனவே சமூகத்தின், குடும்பங்களின், தனிநபர்களின் கொள்ளளவைக் கட்டியெழுப்பும் விடயத்தை அரசசார்பற்ற நிறுவனங்கள் மட்டும் கையாள முடியாது.

அது ஓர் அரசியல், பண்பாட்டுச் செயல்திட்டம். குடும்பங்களின் கொள்ளளவைக் கட்டி எழுப்புவது, பிள்ளை வளர்ப்புத் திறனைக் கட்டியெழுப்புவது, சமூக முகமைத்துவத்தைக் கட்டியெழுப்புவது, முரண்பாடுகள் மோதல்களாக வராமல் தடுப்பதற்குரிய திறன்களைக் கட்டியெழுப்புவது, உள்முரண்பாடுகள் குற்றச்செயல்களாக விகார வளர்ச்சி அடைவதைத் தடுப்பதற்குரிய அறிவு சார் திறன்களைக் கட்டியெழுப்புவது...போன்ற எல்லாமே அரசியல் செயற் திட்டங்கள்தான். அது முழுக்கமுழுக்க அரசியல் பண்பாட்டு மறுமலர்ச்சி. அதற்கு ஒரு அரசியல் தரிசனமும் அதன் வழிவந்த பண்பாட்டு தரிசனமும் இருக்க வேண்டும். அதற்கு அரசியல் தலைமைத்துவம் வேண்டும் பண்பாட்டுத் தலைமைத்துவம் வேண்டும்.

ஆனால் கொடுமை என்னவென்றால், நமது அரசியல்வாதிகள் தங்கள் கட்சிக்குள் வரும் விவகாரங்களையே தீர்க்க முடியாதவர்களாக, தங்களுடைய கட்சிக்காரனுக்கு எதிராகவே வழக்குப் போடுகிறவர்களாக,தங்கள் கட்சியைக் கொண்டுபோய் நீதிமன்றத்தில் நிறுத்துகிறவர்களாகக் காணப்படும் ஒரு சமூகத்தில், குடும்பங்களுக்குள் வரும் முரண்பாடுகள், குற்றச் செயல்களாக விகார வளர்ச்சி அடைவதைத் தடுக்கும் விதத்தில் குடும்பத் தலைமைத்துவத்தின் முகாமைத்துவத் திறன்களைக் கட்டியெழுப்புவது யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறும் சமூக நிறுவனங்களும் நடத்தை பிறழும் இளம்பருவத்தினரும்

கந்தையா அருந்தவபாலன்



ஆரோக்கியமான சமூகமொன்றை உருவாக்குவதற்கான ஒழுங்குமுறையான கட்டமைப்புகள் சமூக நிறுவனங்களாகக் கருதப்படுகின்றன. இவை பௌதிகக் கட்டமைப்புகளன்று. மாறாக இவை தனிமனிதர்களிடையே சீரான சமூக நடத்தைகளை உருவாக்குவதற்கான ஒழுக்க விழுமியங்கள், விதிகள், நியதிகள், நம்பிக்கைகள், பெறுமானங்கள், கட்டுப்பாடுகள்,பண்பாடுகள் போன்றவற்றை வழங்கும் அமைப்பு மூலங்களாகும். இவை பலவாக இருப்பினும் இன்று இளம்பராயத்தவரை அதிகளவில் சமூகமயமாக்கும் பொறுப்புடைய அமைப்புகளாக குடும்பம், பாடசாலை போன்ற கல்வி நிறுவனங்கள், கோயில்கள் போன்ற சமய நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் என்பன காணப்படுகின்றன. இந்நோக்கங்களுக்காக மரபுரீதியாகக் கட்டமைக்கப்பட்ட இந்நிறுவனங்கள் தங்கள் கடமைகளையும் கடப்பாடுகளையும் உணர்ந்து சரிவரச் செய்துவரும்போது நாம் விரும்பும் ஆரோக்கியமான சமூகமொன்று தானாகவே உருவாகும். மாறாக அவைதம் கடமைகளையும் கடப்பாடுகளையும் தெரிந்தோ அன்றித் தெரியாமலோ புறந்தள்ளும்போது சமூகப்பிறழ்வுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்றாக மாறிவிடுகின்றது. இந்நிலையில் இவ்வாறு ஏற்படும் சமூகப்பிறழ்வுக்கான காரணிகள் பற்றிச் சிந்திக்காது சமூகப்பிறழ்வையும் அதனுடன் தொடர்புடைய தனிமனிதர்களையும் குறைகூறுவதாலோ அன்றி விமர்சனம் செய்வதாலோ எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை.

சமூக நிறுவனங்களில் அன்றும் இன்றும் என்றும் முதலிடம் வகிப்பது குடும்பம் என்ற அலகாகும். தொட்டிலில் தொடங்கி சுடுகாடு வரைக்கும் ஒருவனை அல்லது ஒருத்தியை பொருத்தப்பாடுடைய சமூக உறுப்பினராக்குவதற்குத் தொடர்ந்து புடம்போடுவது குடும்பம் மட்டுமே. குறிப்பாகச் சிறுபராயத்தில் குடும்பமொன்றின் பங்கு அளப்பரியது. தாய், தந்தை உட்பட குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அதில் முக்கிய கடமைகளும் பொறுப்புக்களுமுள்ளன. பிள்ளைகள் காட்டு மரங்களல்லர். அவர்கள் நாம் நட்டு வளர்க்கும் தோட்டப் பயிர்கள். முறையாகப் பராமரிக்கப்படாத எந்தப் பயிரும் உரிய பயனைத் தருவதில்லை. அதேபோலவே பிள்ளைகளும். சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கேற்ப கூட்டுக்குடும்பங்கள் இன்று கருக்குடும்பங்களாக மாறிவிட்டன. அது மட்டுமன்றி குடும்பத்தில் ஒருவர் தொழில் புரிந்த நிலைமாறி ஒவ்வொருவரும் தொழில்புரியவேண்டிய நிலை உருவாகிவிட்டது. பொருளாதாரச் சுமைக்கு மட்டுமல்லாமல் அதற்கப்பாலான பொருளாதார, சமூக ஆசைகளுக்காகவும் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் தம்மை இயந்திரமாக மாற்றிவருகின்றனர்.

இதனால் குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலான ஊடாட்டங்கள் வெகுவாகக் குறைந்துவிட்டன. ஒருவருடன் மற்றவர் செலவிடும் நேரமும் ஒருவருக்காக மற்றவர் செலவிடும் நேரமும் குறுகிவிட்டது. இதனால் ஒருவரின் மனதை இன்னொருவர் புரிந்துகொள்வதற்கும் மனக்குறைகளுக்கு வடிகால் வகுப்பதற்கும் முடியாமல் போய்விடுகிறது. இதனால் கணவன் மனவிக்கு இடையில் மட்டுமன்றி குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் இடையிலும் அகன்ற இடைவெளி தோன்றி வருகிறது. இதனால் அதிகளவில் பாதிக்கப்படுவது பிள்ளைகளே. பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கான பௌதிகத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வழங்கும் முக்கியத்துவத்தை அவர்களின் உளவியல் தேவைகளுக்கு வழங்குவதில்லை. பலகுடும்பங்களின் பணப்பெட்டி நிறையும் அதேவேளை குடும்ப உறுப்பினர்களின் குறிப்பாகப் பிள்ளைகளின் மனப்பெட்டிகள் வெறுமையாகிவிடுகின்றன. அதனால் அம்மனப்பெட்டிகளில் சுலபமாக கற்களும் கழிவுகளும் நிறைந்துவிடுகின்றன. இன்னும் சில குடும்பங்களின் பணப்பெட்டிகளும் நிறைவதில்லை. மனப்பெட்டிகளை நிறைப்பதற்கான அறிவும் ஆற்றலும் பெற்றோர்க்கு இருப்பதில்லை. குடும்பக் கட்டமைப்பு மாற்றத்தினால் ஒருபுறத்தில் பிள்ளைகளைச் சூழவுள்ள பாதுகாப்பு வேலிகள் பலமிழக்க மறுபுறத்தில் அதிரித்துவரும் வெளிப்புறக்காரணிகள் இலகுவாக உள்நுழைந்துவிடுகின்றன. இளவயதினர்க்கு நல்லவற்றைவிட தீயவை கவர்ச்சியாகத் தெரிவதால் அவை இலகுவில் தொற்றிக் கொள்கின்றன.

இதேவேளை பல குடும்பங்களில் தாய் தந்தையருக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகள், பிளவுகள், பிரிவுகள் பிள்ளைகளை அதிகளவில் பாதிப்படையச் செய்கின்றன. குடும்பப் பிளவுகள் மற்றும் பிரவுகளினால் தாய் அல்லது தந்தை ஒருவரிடம் தனித்துப் பொருளாதாரச் சுமைகளும் குடும்பச் சுமைகளும் ஏற்றப்படுகின்றன.

இதனால் அவர்களுக்கு பிள்ளைகளை முழுமையாகக் கவனிப்பதற்கான வாய்ப்பு அருகிவிடுகிறது. தமக்கிடையேயான பிரச்சினை களைச் பெற்றோர்கள் சகித்தும் ஒருவர்க் கொருவர் விட்டுக் கொடுத்தும் வாழ வேண்டும் என்பதையும் பல பெற்றோர் கள் மனங்கொள்ளத் தவறிவிடுகின்றனர். இன்று ஒவ்வொருவரிடத்தும் வளர வேண்டிய சகிப்புத்தன்மைக்குப் பதிலாக தனமுனைப்பு அதாவது 'ஈகோ' வளர்ந்துவிடுகிறது. மறுபுறத்தில் பலபெற்றோர்கள் தாம் தவறாக நடந்துகொண்டு பிள்ளைகள் மட்டும் சரியாக நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். பிள்ளைகளின் தொடக்க நடத்தைகளே தம்மைப் பார்த்துத்தான் நகலெடுக்கப்படுகிறது என்பதை பலபெற்றோர்கள் ஏனோ உணரத் தவறிவிடுகின்றனர்.

இன்று பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளைச் சிறந்த பொருளாதார மனிதர்களாக உருவாக்குவதில் காட்டும் அக்கறையை அவர்களை நல்ல பண்புகள் கொண்ட மனிதர்களை உருவாக்க வேண்டுமென்பதில் காட்டுவதில்லை. தமது பிள்ளைகளின் இயல்பான ஆற்றல்களுக்கு மேலாக பல பெற்றோர்கள் தமது சொந்த அபிலாசைகளை பிள்ளைகள்மீது சுமத்துகின்றனர். தம்மால் அடையமுடியாமல் போனவற்றை பிள்ளைகள் மூலம் அடைய விரும்புகின்றனர். இயல்பான தேவைகளுக்கு மேலாகப் பல பெற்றோர்கள் தாமாகவே உருவாக்கிக் கொண்ட சமூகக் கணிப்பு அல்லது பிறரின் அங்கீகாரத்துக்காக பிள்ளைகள் மீது தேவையற்ற அழுத்தங்களை ஏற்படுத்த முனைகிறார்கள். அளவுக்கு மீறிய இவ்வகையான அழுத்தங்களால் பிள்ளைகளைத் தவறான வழிக்குத் தாங்களாகவே தள்ளிவிட்டு பின் வேதனைப்படுவதையும் காணமுடிகிறது. பட்டபின்னாலே வருகிற ஞானத்தால் அவர்களுக்கோ அவர்தம் பிள்ளைகளுக்கோ எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை. இதற்கு மாறாக இன்னும்பல பெற்றோர்கள் தாம் அனுபவிக்க முடியாமல் போனவற்றைப் பிள்ளைகளாதல் அனுபவிக்கட்டும் என்ற மனப்பாங்கில் தேவையற்ற அல்லது தேவைக்கு மிஞ்சிய நகர்வுக்குள் பிள்ளைகளைத் தள்ளுகிறார்கள். இதற்கு வெளிநாடுகளில் உறக்கமின்றி பனியில் உறைந்து திரட்டிய பணமும் உருக்கொடுக்கிறது. இவ்வாறு பல குடும்பங்களில் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமலும் செய்யக் கூடாதவற்றைச் செய்வதனாலும் அக்குடும்பப் பிள்ளைகள் பலர் தனிப்படவும் கூட்டாகவும் சமூகத்தால் செய்யக்கூடாதவையாக கருதப்படுபவற்றைச் செய்யும் நிலைக்கு மாறிவிடுகின்றனர்.

இவ்வாறு பல்வேறு குடும்பப் பின்னணிகளிலிருந்து பல்வேறு குணாதிசயங்களுடன் வரும் எல்லாப் பிள்ளைகளையும் சமநிலைகொண்ட ஆளுமைகளாக கல்வியினூடாக உருவாக்கும் பொறுப்பு இன்னொரு சமூகநிறுவனமான பாடசாலைகளின் கைகளில் தங்கியுள்ளது. இந்தப் பொறுப்பை அச்சமூகநிறுவனம் முழுமையாக உணர்ந்து செயற்படுகிறதா என்பது இன்னொரு கேள்வி. பலபெற்றோர்கள் அவாவி நிற்பதைப்போலவே பாடசாலைகளும் நாட்டில் அதிபுத்திசாலிகளை உருவாக்கிக் காட்டும் அக்கறையை அறிவுள்ள, பண்பான குடிமக்களை உருவாக்கவேண்டுமென்பதில் காட்டத் தவறிவிடுகின்றன.

அதனால் அதற்குத் தேவையான வாய்ப்புகளும் பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் மட்டுப்படுத் தப்படுகின்றன. விளையாட்டு, கலைகள் போன்றவற்றிலான ஈடுபாடு பிள்ளைகளிடம் தொடரச் செய்வதற்குப் பதிலாக அவை குறுங்கால விழாக்கள், போட்டிகள், காட்சிகள் என்பவற்றுக்கு மட்டும் உரியவையாக மாற்றப்பட்டுவிட்டன. புறநடையாக பிள்ளை அல்லது பாடசாலை விரும்பினாலும்கூட அவற்றால் படிப்பு கெட்டுவிடும் என்று பெற்றோர்களும் அனுமதிப்பதில்லை. இங்கு பிள்ளையின் அறிவின் அடையாளம் புலமைப் பரிசில், சாதாரண, உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுவிடுகிறது. இதனால் பாடசாலைகள் குதிரைப் பந்தயத் திடலாக மாற்றப்படுகிறது. வேகமாக ஓடும் குதிரைகளுக்கே அங்கு முக்கியமளிக்கப்படுகிறது. குடும்ப அறியாமைகளுடனும், அழுத்தங்களுடனும் வரும் பல பிள்ளைகளுக்கு பாடசாலைகள் மகிழ்ச்சிக்களமாக மாறுவதற்குப் பதிலாக மனம்வெறுக்கும் பாலைவனங்களாக மாறிவிடுகின்றன. விருப்பின்றிப் பாடசாலைகளுக்குச் சென்று வருதல் அல்லது பாடசாலைக்குப் போகிறேன் என்ற பெயரில் தவறான போக்கிடங்களைத் தேடுதல் அல்லது பாடசாலையை கைவிடுதல் போன்ற நிலைமைகள் உருவாக்கப்படுகின்றன.

இவ்வாறானவர்களை தவறாக வழிகாட்டவும் அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்க வும் ஏலவே இதுபோல உருவான ஒருகூட்டம் எப்போது வருவான் அல்லது வருவாள் என வெளியே விருந்து வைக்கக் காத்திருக்கிறது. எமக்கேன் வீண்வம்பு என்று பிறர் பிள்ளைகளின் தவறுகளைக் கண்டிப்பதற்கு தயங்கும் கூட்டம் சமூகத்தில் பெருகிவிட்டது. இந்த எண்ணம் பாடசாலைகளையும் இன்று தொற்றிவிட்டது. இன்று மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளுக்கான பொறுப்பை தனியாரிடம் பாடசாலைகள் கையளிப்பது போல அவர்களின் ஒழுக்கங்களுக்கான பொறுப்பையும் பெற்றோர்களிடமும் சிலவேளைகளில் காவல்துறையிடமும் கையளித்து விட அவை விரும்புகின்றன. பிள்ளைகளின் தவறுகளைக் கண்டிப்பதற்கும் திருத்துவதற்கும் உடல்ரீதியான தண்டனையே ஒரேவழி என்று எண்ணும் அறிவுமிகு ஆசிரியர் கூட்டமும் அதிகரித்து வருகின்றது.


அதனால் அது கட்டுப்படுத்தப்படுகிறபோது அவர்களும் கையை விட்டுவிடுகிறார்கள். இதற்கு மாறாக மறுபுறத்தில் பிள்ளைகளை நல்வழிப்படுத்த முனையும் சில ஆசிரியர்களைக் கூட சிலபெற்றோர்கள் மனமுடைய வைத்துவிடுகிறார்கள். இது நாட்டின் ஒட்டுமொத்தக் கல்விமுறையில் காணப்படும் குறைபாடுமட்டுமல்ல இந்த முறைமையினுள் எப்படிச் சமூகத்தை வளப்படுத்தவது என்று தெரியாத அல்லது தெரிய விரும்பாத பாடசாலைகளின் குறைபாடுகளும்கூட. ஆரோக்கியமான சமூகமொன்றை உருவாக்குவதில் குடும்பம், பாடசாலை என்பவற்றுடன் கூட்டாகவும் குறைநிரப்பிகளாகவும் செயற்பட வேண்டிய சமய நிறுவனங்களும் இன்று அதன் பிரதான கடமைகளைப் பின்தள்ளிவிட்டு துணைக் கருமங்களுக்கு முக்கியமளிக்கத் தொடங்கிவிட்டன. இதில் தேவாலயங்கள் மசூதிகளைவிட இந்துக் கோயில்களே முன்னிலை வகிப்பதைக் காணமுடியும். உயரமான கோபுரங்களும் அழகான மண்டபங்களும் ஆடம்பரமான திருவிழாக்களுமே கோயில்களுக்கு அவசியமானவை என்ற எண்ணம் மேலோங்கிவிட்டது. கோயிற் திருப்பணி என்பது பௌதிகப் பொருட்களின் உருவாக்கத்துடன் மட்டுப்படுத்தப்படுகிறது. கோயில்களின் தெரிவில் அடிப்படை நோக்கமான ஆன்மீகமும் அறமும் நன்னெறி காட்டலும் இன்று தரநிலையில் கீழிறங்கிவிட்டது. அந்தணர்கள் ஆராதனைகளுன் தங்கள் பணியை மட்டுப்படுத்த, உபயகாரர்கள் தங்கள் பகட்டை வெளிப்படுத்த, ஆலய நிர்வாகிகள் தங்கள் பணியை திருப்பணிக் கணக்கு வழக்குகளுடன் மட்டுப்படுத்தி விடுகின்றனர். தனது கடமைகளினூடாக சமூகத்தை நல்வழிப்படுத்துவதில் முக்கியம் பெற வேண்டிய கோயில்கள் இன்று பண்பாட்டின் குறியீடாகவும் கோயிற் திருவிழாக்கள் பெரும்பாலானவர்க்கு பொழுது போக்கும் மகிழ்விடங்களாகவும் மாறிவிடுகின்றன. கோயில்கள் படிப்படியாக வர்த்தக நிறுவனங்களாக மாறிவிடுகின்றன. இந்த நிலையில் தடம்மாறும் சமூகத்தை கோயில்களால் எவ்வாறு தடுத்து நிறுத்தமுடியும்?

ஆரோக்கியமான சமூகமொன்றைக் கட்டியமைப்பதில் குடும்பம், பாடசாலை, கோயில் போன்ற மரபுரீதியான சமூக நிறுவணங்களை விட இன்று ஊடகங்களின் பங்கு மேலோங்கி விடுகிறது. இன்று அரிவரி தொடங்கி அந்தப்புரம் வரை கையில் விரிந்துவிடுகிறது. முன்னர் மறைக்கப்படவையும் பின்னர் செவிவழி கேட்டவையும் இன்று கண்முன் காட்சிகளாக பார்க்கப்படுகின்றன.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வியட்நாம், ஆப்கான், ஈராக்கில் கற்றுக் கொள்ளாத பாடம்?








## ஈரான் தரைவழிப் போரில் அமெரிக்கா!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

வளைகுடாவில் அமெரிக்கா மீண்டும் ஒரு பாரிய போரைத் தொடங்கியுள்ளது. இந்தப் பிராந்தியம், நீண்டகாலமாக அமெரிக்காவின் ராணுவ தலையீடுகளை எதிர்கொண்டுள்ளது. ஆனால், அமெரிக்காவின் தலையீடு எதிர்பார்த்த முடிவைக் கொடுத்ததா அல்லது எதிர்காலத்தில் கொடுக்குமா என்ற கேள்விக்கு பதில் இல்லை என்றே கூறலாம்.

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் தற்போதைய நடவடிக்கைகளால் ஈரானில் நிலையான அமைதி ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு. மாறாக, அங்கு குழப்பமான சூழலும், கூடுதல் துயரங்களுமே மிஞ்சப்போகின்றன என்பதே அனைவரினதும் எதிர்வு கூறலாகும்.

வியட்நாம், ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகளில் அமெரிக்கா மேற்கொண்ட நீண்டகால ராணுவத் தலையீடுகளால் பெரும் உயிரிழப்பு, நிதி இழப்பு மற்றும் அரசியல் தோல்விகளையே சந்தித்தன. இந்த அனுபவங்களிலிருந்து அமெரிக்கா கற்றுக் கொண்ட பாடங்களின் பின்னரும் தற்போது ஈரானில் காலடி வைக்க தயாராகி வருகிறது.

### அமெரிக்கா பாடம் கற்றதா?

வியட்நாம் முதல் ஈராக் வரை, அதிநவீன ஆயுதங்கள் மற்றும் ராணுவ பலத்தை வைத்து ஒரு நாட்டை ஆக்கிரமிக்க முடியுமே தவிர, மக்களின் மனதையோ அல்லது அரசியல் சூழலையோ வென்றுவிட முடியாது என்பது நிரூபணமாகியுள்ளது. ஏனெனில் இராணுவ பலம் மட்டுமே தீர்வல்ல என்பதை உணர்ந்து கொள்ள அமெரிக்கா இந்த நாடுகளில் தவறிவிட்டது.

வியட்நாமில் மக்களின் ஆதரவு இல்லாமல் போரில் அமெரிக்க படைகள் படுதோல்வியை சந்தித்தன. இதன் பின்னரும் பல ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் வாசிங்டன் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன.

முக்கியமாக அந்நாட்டு மக்களின் ஆதரவு இல்லாத எந்த ஒரு அரசாங்கத்தையும் அமெரிக்காவால் நிலைநிறுத்த முடியாது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் ஆதரவுடன் செயல்பட்ட அரசு, அமெரிக்கப் படைகள் வெளியேறியவுடன் தலிபானிடம் வீழ்ந்தது இதற்குச் சான்றாகும்.

பனிப்போர் காலத்தின் பின்னர், ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்தை ஒழிக்கச் சென்ற அமெரிக்கா, அங்கு நீண்டகால அரசியல் ஸ்திரமற்ற சூழலையும், வன்முறையையும் மட்டுமே எஞ்சியதாக விட்டுச் சென்றது. அது மாத்திரமன்றி பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரை அமெரிக்க பறித்தது என்பதை மறுக்க முடியாது.


அமெரிக்க அரசு, மற்றொரு நாட்டின் கலாச்சாரம், அரசியல் மற்றும் சமூகக் கட்டமைப்பை வலுக்கட்டாயமாக மாற்ற முயற்சிப்பது தோல்வியில் முடிந்து, அதிகப்படியான நிதி மற்றும் ராணுவ இழப்புகளை சந்தித்துள்ளது. அது மாத்திரமன்றி, வெளியேறும் உத்தி இல்லாமல் பல நாடுகளில் பாரிய அழிவுகளை சந்தித்துள்ளது. உண்மையில் போரைத் தொடங்குவது எளிது, ஆனால் முடிப்பது கடினம். தெளிவான வெளியேற்ற உத்தி இல்லாமல் போர் புரிவது நீண்டகால சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்பது ஈராக் மற்றும் வியட்நாம் போர்களில் இருந்து இதுவரை அமெரிக்க கற்றுக் கொண்டதாக தெரியவில்லை.

### ஈரானில் ஆட்சி மாற்றம்?

இந்த வருடம் பெப்ரவரி 28 முதல் ஈரான் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் ஆரம்பத்திலேயே அந்நாட்டின் அதிஉயர் தலைவர் அலி கொமனெயி கொல்லப்பட்டார். ஈரானின் அணுசக்தி திட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், அங்கு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாகவும் கூறும் அதிபர் டொனால்ட் ட்ரம்பின் முக்கிய இலக்குகளில் ஒருவராக அவரும் இருந்தார்.

வளைகுடா பிராந்தியத்தில் இதற்கு முன்னரும் பல அமெரிக்க அதிபர்கள் இராணுவ ரீதியாக தலையிட்டுள்ளனர். இந்த விவகாரத்தில் ட்ரம்புக்கு முன்னோடியாக இருப்பவர்கள், அமெரிக்காவின் அதிபராக இருந்த சீனியர் புஷ் மற்றும் ஜூனியர் புஷ், ஒபாமா ஆகியோர். ஈராக்கில் சதாம் ஹூசேன், லிபியாவில் முகம்மர் அல் கடாபி ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுத்து அவர்கள் ஆட்சியை வீழ்த்தி கவிழ்த்தனர். ஆனால் அந்த நாடுகளுக்கு ஜனநாயகத்தையோ அல்லது சுதந்திரத்தையோ மீட்டுத் தரவில்லை. அதுமட்டுமின்றி, இன்று வரை நீடிக்கும் உள்நாட்டுப் போர் மற்றும் அமைதி நிலையற்றத் தன்மையையே இந்த நாடுகளில் இன்னமும் தொடர்கிறது.

> வியட்நாம் முதல் ஈராக் வரை, அதிநவீன ஆயுதங்கள் மற்றும் ராணுவ பலத்தை வைத்து ஒரு நாட்டை ஆக்கிரமிக்க முடியுமே தவிர, மக்களின் மனதையோ அல்லது அரசியல் சூழலையோ வென்றுவிட முடியாது என்பது நிரூபணமாகியுள்ளது.







வடக்கு ஈராக்கிலும், சிரியாவிலும் ஐ.எஸ்.ஐ.எஸ் எனும் அமைப்பை ஒழிக்க அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து பல்வேறு விவாதங்கள் எழுந்தன. ஆனால் 2024இல் சிரியாவில் அசாத் வீழ்ச்சிக்குப் பிறகு, பிற இஸ்லாமிய குழுக்கள் அங்கு அதிகாரத்தை கைப்பற்றின. இதற்கு முன்பாக ஆப்கானிஸ்தானில் சுமார் இரண்டு தசாப்த அமெரிக்க தலையீட்டிற்குப் பிறகு, 2021இல் தாலிபன் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியமை அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் தோல்வியாகவே கருதப்படுகிறது.

### ஈராக் ஆக்கிரமிப்பு தோல்வி:

2003ஆம் ஆண்டில், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் தலைமையிலான கூட்டணி ஈராக் மீது படையெடுத்தது. சதாம் உசேன் அரசிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகவும், பயங்கரவாதத்துடன் அவருக்குத் தொடர்பு இருப்பதாகவும் கூறி இந்தப் படையெடுப்பு நடத்தப்பட்டது.

ஒரு சில வாரங்களிலேயே அமெரிக்க படைகள் பாக்தாத் நகரைச் சென்றடைந்தது. சதாம் உசேன் கைது செய்யப்பட்டு, பின்னர் தூக்கிலிடப்பட்டார். ஆனால், தேடப்பட்ட அந்த பேரழிவு ஆயுதங்கள் ஒருபோதும் கண்டறியப்படவில்லை.

இதன் பின்னர் சுனி, ஷியா மற்றும் குர்துகளுக்கு இடையிலான இன மோதல்கள், கிளர்ச்சிகள், தீவிரவாதக் குழுக்களின் எழுச்சி என ஈராக் நாடே நெருக்கடியில் மூழ்கியது. இதன் உச்சகட்டமாக ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு உருவானது. இந்த அமைப்பு 2014 மற்றும் 2015க்கு இடைப்பட்ட காலத்தில் ஈராக்கின் மூன்றில் ஒரு பங்கு நிலப் பரப்பையும், சிரியாவின் பாதி நிலப் பரப்பையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

2003 முதல் ஈராக்கில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையின் நேரடி விளைவாக பொதுமக்கள் மற்றும் போராளிகள் எனக் குறைந்தது 300,000 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கும் என பிற அமைப்புகள் கருதுகின்றன.

### ஆப்கானில் அமெரிக்க தலையீடு:

2021ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் தலைநகர் தாலிபன்களால் கைப்பற்றப்பட்டபோது, ஆயிரக்கணக்கான மக்கள் காபூலை விட்டு வெளியேற முயன்றனர். இந்த அவலநிலையை சர்வதேச ஊடகங்கள் வெளிப்படுத்தின.

2001ஆம் ஆண்டு, அமெரிக்கா மற்ற நேட்டோ உறுப்பு நாடுகளுடன் இணைந்து, ஆப்கானிஸ்தானில் தாலிபன்' என்ற ராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது.

1996இல் ஆப்கான் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றிய அடிப்படைவாத இஸ்லாமிய இயக்கம், 2001 செப்டம்பர் 11 அன்று நியூயார்க் இரட்டைக் கோபுரங்கள் மற்றும் பென்டகன் மீது தாக்குதல் நடத்திய அல்-கொய்தா குழுவின் தலைவர் ஒசாமா பின் லேடனை ஒப்படைக்க மறுத்துவிட்டது. இதன் காரணமாகவே ஆப்கானிஸ்தான் மீது படையெடுக்க அமெரிக்கா முடிவு செய்தது.

இந்தத் தலையீடு சில வாரங்களிலேயே தலிபன் ஆட்சியை வீழ்த்துவதிலும், சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் ஒரு புதிய அரசாங்கத்தை நிறுவ அமெரிக்க முயன்றது. ஆனால் இது போரை முடிவுக்குக் கொண்டு வரவில்லை. அமெரிக்காவின் தலையீட்டால் தலிபன்கள் பின்னடைவைச் சந்தித்தாலும், அவர்கள் மீண்டும் ஒன்றிணைந்து அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளுக்கு எதிராகத் தொடர்ந்து போரிட்டதால், இந்த மோதல் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது.

2020ஆம் ஆண்டு, ஆப்கானிஸ்தானின் பெரும்பான்மையான பகுதிகளை தலிபன்களிடம் இழந்த அமெரிக்கா அந்நாட்டில் இருந்து தனது படைகளைத் திரும்பப் பெறுவது குறித்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. அடுத்த ஆண்டு மே மாதம் தொடங்கிய அமெரிக்கப் படைகள் வெளியேற்றம், 2021 ஆகஸ்ட் மாதத்தில் தலிபன்கள் காபூலை கைப்பற்றிய பிறகு துரிதப்படுத்தப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் நடந்த 20 ஆண்டுக்கால அமெரிக்க தலையீடு மற்றும் அந்த மோதலுடன் தொடர்புடைய வன்முறைகளின் நேரடி விளைவாக, பொதுமக்கள், ஆப்கானிய வீரர்கள், தாலிபன்கள், மேற்கத்தியப் படைகள் என 1,76,000-க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

### வியட்நாம் போர் படிப்பனைகள்:

வியட்நாமில் 1965 இலிருந்து ஏப்ரல் 30, 1975ல் சைகானின் வீழ்ச்சி வரை நடைபெற்ற போரில் பல நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். வட வியட்நாம் படை சோவியத் ஒன்றியம், சீனா மற்றும் பிற கம்யூனிச நாடுகளால் ஆதரிக்கப்பட்டது. தெற்கு வியட்நாமியப் படை அமெரிக்கா, தென்கொரியா, அவுஸ்திரேலியா, தாய்லாந்து மற்றும் பிற கம்யூனிச எதிர்ப்பு அணியால் ஆதரிக்கப்பட்டது.

1973, ஆகஸ்ட் 15 அமெரிக்கப் படைகள் முழுமையாகப் பின்வாங்கின. 1975 வடக்கு வியட்நாம் படை சைகோனைக் கைப்பற்றியதுடன் போர் முடிவுக்கு வந்தது. அதை அடுத்த ஆண்டில் வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் ஒன்றிணைந்தது. இப்போர் பெருமளவும மனித உயிர்களைப் பலிவாங்கியது. இப்போரின் போது இறந்த வியட்நாமிய வீரர்கள் மற்றும் மக்களின் எண்ணிக்கை 3.8 மில்லியன்கள் வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 300,000 கம்போடியர்களும், 62,000 லாவோசு மக்கள், 58,220 அமெரிக்க வீரர்களும் இப்போரில் கொல்லப்பட்டனர். வியட்நாம் முதல் ஈராக் வரை, அதிநவீன ஆயுதங்கள் மற்றும் ராணுவ பலத்தை வைத்து ஒரு நாட்டை ஆக்கிரமிக்க முடியுமே தவிர, மக்களின் மனதையோ அல்லது அரசியல் சூழலையோ வென்றுவிட முடியாது என்பது நிரூபணமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அமெரிக்க விமானத்தளம் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்

ரியாத், மார்ச். 29

சவுதி அரேபியாவில் உள்ள பிரின்ஸ் சுல்தான் விமானத் தளம் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் 12 அமெரிக்கப் படையினர் காயமடைந்தனர். அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று அமெரிக்க இராணுவ உயர் அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார். (எ)

## ரயில் சேவையில் டிஜிற்றல் பயணச்சீட்டு முறை அறிமுகம் ஏப்ரலில் ஆரம்பம்

கொழும்பு, மார்ச். 29

இலங்கை புகையிரத துறை யில் பாரம்பரிய காகித பற் றுச்சீட்டு முறையை மாற்றும் நோக்கில், டிஜிற்றல் பயணச் சீட்டு முன்முயற்சி திட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊஷுசீ (Corporate Strat egic Reform Progr amme) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப் படும் இந்த புதிய டிஜிற்றல் பயணச்சீட்டு முறை, நாடு முழு வதும் பய ணிகள் சேவையை நவீனமயப் படுத்தும் முக்கிய மான முன்னேற்றமாக பார்க் கப்படுகிறது.

இந்த முன்முயற்சி திட்டம் முதற்கட்டமாக களனி வெளி ரயில் மார்க்கத்தில் செயல்படுத் தப்படவுள்ளது.

புதிய முறைமையின் கீழ், நவீன பயணச்சீட்டு சரி பார்ப்பு கருவிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. (எ)

### கடமை தவறும் சமூக நிறுவனங்களும்……

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்புகளுடனும் ஊடகங்கள் வழங்கி வருகின்றன.

இன்று மரபுரீதியான ஊட கங்களைப் பின்தள்ளிவிட்டு சமூக ஊட கங்கள் முன்னுக்கு வந்துவிட்டன. அவை நல்லவற்றைவிட தீயவற்றையே அதிகம் அள்ளி வழங்குகுகின்றன. மறைக்கப்பட வேண்டியவற்றையும் இலைமறைகாயாக சொல்லப்பட வேண்டியவற்றையும் மிக ஆழமாகச் சென்று அக்குவேறு ஆணிவே றாக பலகோணக் காட்சிகளுடன் சித்த ரித்து பணந்தேடுகின்றன. முன்னர் 'அடல்ஸ் ஒன்லி' இப்போது அனைவர்க் கும் பொதுவாகிவிட்டது. அவற்றுக்குப் போட்டியாக மரபுரீதியான ஊடகங்க ளும் தம்மை மாற்ற முனைகின்றன.

நல்லவற்றை விட்டு அல்லவற்றை அள்ளிக் கொள் ளும் தேயிலை வடிதட்டுகளாக இளம்பராயத்தினர் மாறிவிட்டனர் அல்லது மாற்றப்பட்டு விட்டனர். இதில் உள்ளூர் ஊடகங்களை குறைசொல்ல முடியாது.

அவர்கள் அடக்கி வாசித்தா லும் அகிலம் இன்று அனைவரதும் கைவி ரலிலும் உள்ளது. இந்நிலையில் ஊட கங்களை கட்டுப்படுத்துவது கடினமா னது. அதுதொடர்பாகப் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்திக் கண்கா ணிக்கும் பொறுப்பு பெற்றோரையும் அடுத்து ஆசிரியர்களையும் சேரந்து விடுகிறது. அக்கடமைகளை அவர்கள் சரிவரச் செய்யாமையும் இளம்பராயத்தி னரின் நடத்தைப் பிறழ்வுக்குக் காரண மாக அமைந்து விடுகின்றன. ஆனால் இன்று தாய்மாரின் குழந்தையைத் தாக் காட்டும் கருவியாக கைபேசி மாறிவிட் டபின் பின்னர் எதிர்காலத்தில் அப்பிள் ளைகளைப எவ்வாறு பெற்றோர்களால் கட்டுப்படுத்த முடியும்.

### கடந்த காலப் பிரச்சினைகளை…

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனால், பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, இலங்கை தொடர்ந்தும் பலவீனமான செயற்பாடுக ளையே வெளிக்காட்டி, (பகிரங்கமான போர் இல்லா விட்டாலும்) தீர்வு காணப்படாத பிரச்சினைகளுடன் கூடிய, இனரீதியாகப் பிளவுபட்ட ஒரு நாடாகவே தொடர்ந்தும் இருக்க வேண்டிவரலாம்.

அதனால் இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பில் அரசாங்கம் அண்மையில் தெரி வித்த கருத்து மிகவும் முக்கியமானது.

அவசரமான பொரு ளாதார மற்றும் உலகளாவிய சவால்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற போதிலும் கூட, அரசாங்கம் கடந்த காலத்தை மறந்துவிடவில்லை என்பதை இது காட்டுகி றது. இலங்கை அதன் சகல மக்களுக்கும் உறுதியானதும் நீதியானதுமான எதிர்காலத்தைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய முறையில் கடந்த காலத்தைக் கையாளுவதற்கான ஆணையையும் ஆற்றலையுமுடைய அரசாங்கம் ஒன் றைக் கொண்டிருக் கிறது.

# பாடசாலை மீதான அமெரிக்க தாக்குதல் போர்க்குற்றமாகும்

## ஐ.நாவில் ஈரான் வெளிவிவகார அமைச்சர்

தெஹ்ரான், மார்ச். 29

ஈரான் பாடசாலை மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி 175 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை கொலை செய்தமை தவறான தாக்குதல் அல்ல போர்க் குற்றம் என்று ஐ.நாவில் ஈரான் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராக்சி கூறினார்.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த மாதம் 28 ஆம் திகதி போர் தொடுத்தன. அப் போது ஈரானின் மினாப் நகரில் உள்ள ஆரம்ப பாட சாலை மீது டொமஹாக் ஏவுகணை மூலம் அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இதில் 175 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உயிரிழந்தனர். ஆனால், இந்த தாக்குதலை ஈரானே நடத்தியிருக்கலாம் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறினார். இதன்பின் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது உறுதியானது.

இதையடுத்து இது தவறாக நடைபெற்ற தாக்குதல் என்று கூறப்பட்டது. பழைய தரவுகளின் அடிப்படை யில் ஈரான் இராணுவ தளம் இருந்த ஒரு பகுதியில் பாடசாலை கட்டடம் அமைந்திருந்ததால், தவறாக நடைபெற்ற தாக்குதல் என கூறப்பட்டது.

இந்த நிலையில், ஐ.நா. மனித உரிமை சபை கூட்டத்தில் ஈரான் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராக்சி வீடியோ மூலம் ஆற்றிய உரையில்,

ஈரான் பாடசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்டது. நவீன தொழில்நுட் பங்கள் மூலம் துல்லிய தாக்குதல் நடத்துவதாக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூறுகின்றன.

அப்படியிருக்கும்போது இது தவறான தாக்குதல் என்பதை யாரும் நம்ப மாட்டார்கள். இந்தத் தாக்குதல் போர்க் குற்றம். இதற்கு அனைத்து தரப்பினரும் கண்டனம் தெரிவிக்க வேண்டும். அராஜகத்தை நியாயப்படுத்தவும் முடியாது, மறைக்கவும் முடியாது- என்றார். (எ)

## புத்தாண்டு காலத்தில் தடையின்றி எரிபொருள்

### கவனம் செலுத்துகிறது அரசு

கொழும்பு, மார்ச் 29

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு காலத்தில் எரிபொருள் விநியோகத்தை தடையின்றி மேற்கொள்ள கவனம் செலுத்தப்படுவதாக அமைச்சர் பிமல் ரத்நா யக்க தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்தை மேற் பார்வையிடுவதற்காக நியமிக்கப்பட்ட குழு, போக்கு வரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் கூடியது.

கைத்தொழிலாளர்கள், தமது உற்பத்திகளை நாடு முழுவதும் விநியோகிப்பதற்காக வாகனங்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள எரிபொருள் ஒதுக்கீடு போதுமானதாக இல்லை என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை நிராகரித்தால் பொருள்க ளின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும், அவ்வாறு நடந்தால் பண்டிகைக் காலத்தில் பொது மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாக நேரிடும் எனவும், அதிக கவனம் செலுத்தப்பட்டது.

தொழிற்சாலைகள், சதொச உள்ளிட்ட அத்தியா வசிய உணவுப் பொருட்களை விநியோகிக்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள்,

இறக்குமதியாளர்கள், சுற்றுலாத்துறை சேவை நிறுவனங்கள் அல்லது ஹோட் டல்கள் மற்றும் ஏனைய சேவை வழங்கல் நிறுவனங்க ளுக்கு எரிபொருள் விநியோகிப்பது குறித்தும் கலந்து ரையாடப்பட்டது.

அந்தந்த நிறுவனங்களில் இருந்து முன்வைக்கப்ப டும் எரிபொருள் ஒதுக்கீடு தொடர்பான கோரிக்கை களை பரிசீலித்து தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுப்பதற்கும், அக்கோரிக்கைகளை சம்பந் தப்பட்ட அமைச்சுகள் ஊடாக, வலுசக்தி அமைச்சிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

விவசாயம், கடற்றொழில் உள்ளிட்ட ஏனைய துறைகளுக்காக,விவசாய ஆராய்ச்சி அதிகாரிகள் உள் ளிட்ட, அந்தந்த துறைகளுக்குரிய அரச அதிகாரிகளின் பரிந்துரைக்கு அமைய வழங்கப்படும் கடிதத்திற்கு எரிபொருள் வழங்குவதற்குப் பதிலாக, கியூ.ஆர் குறி யீட்டு முறையைப் பயன்படுத்தும் வேலைத் திட் டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (அ)

## மோட்டார் குண்டுகள் மீட்பு

திருமலை, மார்ச் 29

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவிலுள்ள மாவிலாறு பகுதியில், வெடிக்காத நிலையில், 61 ரக இரண்டு மோட்டார் குண்டுகள் நேற்று காலை மீட் கப்பட்டதாக சேருநுவர பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

மாவிலாறு குளத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் இந்த மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற அனுமதியைப் பெற்று, குறித்த மோட்டார் குண்டுகளை, விசேட அதிரடிப் படையின் ஊடாக செயலிழக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## ஈரான்- அமெரிக்கா இடையே அமைதி பேச்சுவார்த்தை?

வாஷிங்டன், மார்ச். 29

அமெரிக்காவுடன் ஈரான் அமைதி பேச்சுவார்த்தை களை நடத்தும் என்று தான் நம்புவதாக அமெரிக் காவின் விசேட தூதுவர் ஸ்டீவ் விட்காப் தெரி வித்தார்.

இதேவேளை, தெஹ்ரான் ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய விரும்புவதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அடுத்த வாரம் சந்திப்புகள் நடைபெறும் என்று நாங்கள் நினைக்கிறோம். நிச்சயமாக இதற்காக நம் பிக்கையுடன் இருக்கிறோம் என்று விசேட தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் அமைதித் திட்டத்துக்கு தெஹ்ரா னிடமிருந்து பதிலை எதிர்பார்ப்பதாக கூறிய அவர், "எங்களிடம் 15 அம்சத் திட்டம் உள்ளது, ஈரா னியர்கள் அதற்குப் பதிலளிப்பார்கள் என்று எதிர்பார்க் கிறோம். அது அனைத்தையும் தீர்க்கக்கூடும்"- என்று தெரிவித்தார்.

ஈரான் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் ஹோர்மூஸ் நீரிணை ஊடாக 10 எண்ணெய் தாங்கிக் கப்பல்களை அனுமதித்துள்ளதாக ட்ரம்ப் கூறியதை விசேட தூதுவர் உறுதிப்படுத்தினார்.

'கப்பல்கள் கடந்து செல்கின்றன. இது ஒரு நல்ல அறிகுறியாகும்- என்றார்.

ஈரான் மீதான கடும் எச்சரிக்கைகளுக்கு மத்தியில், தெஹ்ரான் ஒரு ஒப்பந்தத்துக்குத் தயாராக இருப்பதாகவும், வரும் வாரங்களில் போர் முடிவுக்கு வரும் என்றும் ட்ரம்ப் கூறி வருகிறார். மியாமிக்கு வருகை தந்தபோதும் அவர் அதே நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார்.

ஈரான் தற்போது அழிவைச் சந்தித்து வருகிறது. அவர்கள் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள், நாமும் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம்.

அவர்கள் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள விரும்புகிறார்கள், என்று ட்ரம்ப் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (எ)

## நாட்டின் சுற்றுலாத் துறைக்கு 4 இலட்சம் லீற்றர் எரிபொருள்

கொழும்பு, மார்ச் 29

இலங்கையின் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் நோக்கில், பதிவு செய்யப்பட்ட சுற்றுலாவாகன நடத்துநர்களுக்கு 400,000 லீற்றர் எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் புத்திக ஹேவவசம் இது குறித்து தெரிவிக்கையில்-

எரிபொருள் விநியோகத்தை முறைப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட விசேட கியூ.ஆர். குறியீட்டு முறையின் கீழ் இந்த எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது.

இதில் டீசல் மற்றும் பெற்றோல் ஆகிய இரண்டும் உள்ளடங்குவதுடன், ஹோட்டல்களின் அத்தியா வசியத் தேவைகளுக்காக மேலதிக எரிபொருளும் ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கொடிகாமத்தில் சட்ட...

மீறி - பொலீஸ் அதிகாரிகளை மோதித்தள்ளிய உழவு இயந்திரம் மணலுடன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. உழவு இயந்திரத்தில் நசியுண்டு பொலீஸ் அதிகாரி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், மற்றொரு பொலீஸ் அதிகாரி காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த 50 வயதான ஹெட்டியாராட்சிக்கே அல்பேர்ட் என்பவரே கொல்லப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பில் உடனடியாகக் களத்தில் இறங்கிய கொடிகாமம் பொலீஸார் நேற்று மாலை சம்பவத்துடன் தெதாடர்புடையதெனச் சந்தேகிக்கப்படும் உழவு இயந்திரத்தைக் கிளாலிப் பகுதியில் இருந்து கைப்பற்றியுள்ளனர் என்று கொடிகாமம் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

உழவு இயந்திரத்தின் சாரதிக்கு வலைவீசித் தேடுதல் நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ள பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ)

## ஜனநாயக தமிழ்த் தேசியக்...

கேசு சந்திரகுமார், நாகலிங்கம் இரட்ண லிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்தும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும் இதில் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## 2ஆம் இடத்தில்...

காரணங்களாகக் கூறப்படுகின்றன.

மில்லியன் கணக்கான மக்கள் தரமற்ற வீடுகளில் வசித்து வரும் நிலையில், வீடுகளின் அதீத விலை உயர்வு மக்களின் பொருளாதார வளர்ச்சியைத் தடுப்பதுடன், நகரங்களை நோக்கிய இடப்பெயர்ச்சியையும் குறைத்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பான மற்றும் கட்டுப்படியாகக்கூடிய விலையில் வீடுகள் கிடைப்பதை உறுதி செய்வது பிராந்திய அளவில் பல நன்மைகளைத் தரும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

முறையான வீட்டுவசதி உற்பத்தித்திறனை அதிகரிக்கும். இது மாணவர்களின் பாடசாலை வருகையை அதிகரிப்பதுடன், ஒட்டுமொத்த வாழ்க்கைத்தரத்தையும் மேம்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் தற்போதைய பொருளாதாரச் சூழலில், நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்கள் சொந்தமாக ஒரு வீட்டைக் கொள்வனவு செய்வது எட்டாக்கனியாக மாறியுள்ளதை இந்த அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

## சந்திரிகா-நளிந்த...

நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது, வைத்தியசாலைகளினால் வழங்கப்படும் சேவைகளை, குறிப்பாக கண் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை சேவைகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

வைத்தியசாலைகளின் வெளிநோயாளிப் பிரிவு, பல் மருத்துவப் பிரிவு மற்றும் ஆய்வகச் சேவைகள் உள்ளிட்ட முக்கிய பிரிவுகளின் செயற்பாடுகள் இதன்போது மதிப்பாய்வு செய்யப்பட்டது.

அத்துடன், வைத்தியசாலைகளின் நிர்வாக மற்றும் நிதி விவகாரங்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க, மேலதிக செயலாளர்களான ஜனக கித்சிறி குணவர்தன, சமிகா கமகே, பிரதிப் பணிப்பாளர் நாயகங்களான வைத்தியர் அர்ஜூன திலகரத்ன, சமித்தி சமரகோன், தலைமை நிதி அதிகாரி ஜி.எஸ். கருணாரத்ன மற்றும் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் கயான் ரணவீர உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ)

## ரஷ்ய வெளிவிவகார...

இராஜதந்திர உறவுகளில் இந்த 11ஆவது ஆலோசனை கூட்டம் ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (அ)

## விவசாயிகள் மீனவர்களு...

வாகனங்கள் இன்றி எரிபொருள் தேவைப்படும் தரப்பினருக்காகவே இந்த விசேட கியூ.ஆர் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தமது எரிபொருள் தேவையை கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலகத்தில் உறுதிப்படுத்தி, இந்த புதிய கியூ.ஆர் முறைமையின் கீழ் பதிவு செய்துகொள்ள முடியும்.

இந்த புதிய கியூ.ஆர் குறியீடானது அந்தந்த நபர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்திற்கு அமைய உருவாக்கப்படும்.

இத்திட்டம் 7 வெவ்வேறு பிரிவுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், ஒவ்வொரு பிரிவிற்கும் வழங்கப்படும் எரிபொருள் அளவை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தீர்மானிக்கும்.

இதன் மூலம் விவசாயிகள், மீனவர்கள் மற்றும் பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளுக்காக வாகனங்கள் இன்றி எரிபொருளைப் பயன்படுத்தும் அனைத்து தரப்பினரினதும் எரிபொருள் தேவைகளை இலகுவாகப் பூர்த்தி செய்ய முடியும்-என்றார். (அ)

## கொக்குத்தொடுவாயில்...

மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த கடிதம் பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் பிரதியிடப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள குறித்த கடிதத்திற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதமர் அலுவலகத்தால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவு பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீக தனியார் வயல் காணிகளையும் அதற்கு இடைப்பட்ட மேய்ச்சல் தரை நிலங்களையும் மகாவலி அதிகார சபை தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள வர்த்தகருக்கு சட்டவிரோதமாக குத்தகைக்கு வழங்கியுள்ளது.

இந்நிலையில் மகாவலி அதிகார சபையிடமிருந்து சட்டவிரோத குத்தகை அனுமதியைப் பெற்றுக்கொண்ட குறித்த பெரும்பான்மையின வர்த்தகர் தமிழ்மக்களின் தனியார் காணிகளில் அத்துமீறி நுழைந்து உப்பளம் அமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதால் இன முறுகல் ஏற்படும் அபாய நிலை தோன்றியுள்ளது.

எனவே இந்த சட்டவிரோதமான அத்துமீறிய உப்பளம் அமைக்கும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மாகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

அத்தோடு குறித்த கடிதம் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் விசாயம், கால்நடை, காணிமற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த, முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் உபாலி சமரசிங்க, வடக்கு மாகாண ஆளுநர், முல்லைத்தீவு மாவட்டசெயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் ஆகியோருக்கும் பாராளுமன்ற உறுப்பினரால் பிரதியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் கொக்குத்தொடுவாயில் தனியார்காணிகளில் அனுமதியின்றி உப்பளம் அமைக்கப்படும் செயற்பாட்டிற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி பிரமரின் அலுவலகத்திலிருந்து மகாவலி அதிகார சபை பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

## எரிபொருள் விலை...

உறுதிப்படுத்த முடியும்.

உலக சந்தையில் நிலவும் மசகு எண்ணெய் விலைகளின் மாற்றங்களுக்கு அமையவே அடுத்த கட்ட தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

அதனால், எரிபொருள் விலை திருத்தம் தொடர்பான இறுதி முடிவை, அரசாங்கம் எதிர்வரும் நாட்களில் எடுக்கும்-என்றார். (அ)

## வடக்கில் மணல்...

வடக்கு மாகாணத்தில் சட்டவிரோத கனியவள அகழ்வு மற்றும் விநியோகத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இடம்பெற்ற அவசர விசேட உயர்மட்டக் கலந்துரையாடலின்போதே தற்போதுள்ள சூழ்நிலை யைக் கருத்தில்கொண்டு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

ஆளுநர் செயலகத்தில் நேற்று சனிக்கிழமை இரவு 7.30 மணியிலிருந்து 8.45 மணி வரையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலுக்குத் தலைமை தாங்கினர்.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் இ.சந்திரசேகர், கொடிகாமத்தில் சட்டவிரோத மணல் கடத்தலைக் கட்டுப்படுத்த முனைந்த பொலிஸ் அலுவலர் உயிரிழந்த சம்பவத்துக்குத் ஆழ்ந்த இரங்கல்களை வெளிப்படுத்தினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இவ்வாறான உயிரிழப்புகள் தொடர்கதையாக உள்ளமையை விசனத்துடன் சுட்டிக்காட்டிய அவர், மணல் மாபியாக்களிடமிருந்து எமது மாகாணத்தை மீட்டெடுப்பதற்கான பொறிமுறை அவசரமாக உருவாக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

ஆளுநர் தனது உரையில், கடந்த 10ஆம் திகதி புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவரை அழைத்து ஆளுநர் செயலகத்தில் நடத்திய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைக் குறிப்பிட்டதுடன், அவை விரைவில் நடைமுறைக்கு வரும்போது மணல் விலை கணிசமாகக் குறையும் எனத் தெரிவித்தார்.

அந்தச் சாத்தியமான பொறிமுறையின் ஊடாக மணல் விலை குறையும்போது மாபியாக்களின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து உரையாற்றிய வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், பொலிஸாரால் மாத்திரம் இதனைக் கட்டுப்படுத்த முடியாது எனவும், அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர் தனதுரையில், கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு - விநியோகம் தொடர்பான விவகாரம் உயிர் அச்சுறுத்தலான ஒன்று குறிப்பிட்டிருந்த நிலையில் அந்தத் துன்பியல் இப்போது நடந்தேறியிருக்கின்றது எனத் தெரிவித்தார்.

அத்துடன் சட்டவிரோ மணல் அகழ்வுக்கு எதிராகக் குரல் கொடுப்போர் மட்டுமல்ல அவற்றை எடுத்துச் செல்லும் வாகனங்களின் அதிவேகம் காரணமாகவும் பலர் உயிரிழந்ததையும் சுட்டிக்காட்டினார். அதன் பின்னர் நடைபெற்ற கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டு தீர்க்கமான முடிவுகள் எட்டப்பட்டன.

சட்டவிரோத மணல் கடத்தலைத் தடுக்கும் நோக்கில், இரவு நேரங்களில் மணல் கொண்டு செல்வதற்கு முற்றாகத் தடை விதிப்பதற்கும், பகல் நேரங்களில் மாத்திரம் மணல் விநியோகத்தை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மணல் கொண்டு வருவதற்கான அனுமதியை உடனடியாக நிறுத்துவதற்கு உரிய பொறிமுறையூடாக நடவடிக்கை எடுப்பதற்கும் முடிவெடுக்கப்பட்டது.

மேலும், பொலிஸாரும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியக அதிகாரிகளும் இணைந்து விசேட வீதிச்சோதனைகளை மேற்கொள்வதுடன், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் வாகனங்களைக் கைப்பற்றி பொலிஸ் நிலையங்களுக்குக் கொண்டு சென்று மணலை ஏலத்தில் விடுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அறிவுறுத்தப்பட்டது.

குளத்து மணலைக் கழுவி உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக விநியோகிப்பதன் மூலம் குறைந்த விலையில் மக்களுக்கு மணலைப் பெற்றுக்கொடுக்கும் பொறிமுறையை விரைவுபடுத்தவும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இது மணல் மாபியாக்களின் ஏகபோகத்தைக் கட்டுப்படுத்தும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், வடக்கு மாகாணத்தில் இதுவரை வழங்கப்பட்ட மணல் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரங்களில் செயற்பாட்டு நிலையிலுள்ளவை தொடர்பான விவரங்களைப் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் வழங்க வேண்டும் என்றும், எதிர்காலத்தில் பொலிஸார், மாவட்டச் செயலாளர்கள், ஆளுநர் செயலகம் இணைந்த குழுவில் அதனை இற்றைப்படுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் ஊடாக மணல் அகழப்படும் இடங்கள் பொலிஸாருக்குத் தெரியவருவதுடன், அகழப்படும் மணல் கொண்டு செல்லும் பாதைகளை அறியமுடிவதன் மூலம் ஏனைய மார்க்கங்களில் செல்லும் மணல் வாகனங்களைப் பிடிப்பதற்கும் உதவியாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், மணல் விநியோக வாகனத்துக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும்போது எவ்வளவு மணி நேரத்துள் அதனை விநியோகிக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை விதிப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

கனரக வாகனங்களின் வேகக்கட்டுப்பாட்டை இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதற்கும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. குறிப்பாகப் பாடசாலை நேரங்களில் வீதிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், சட்டத்தை மீறுவோருக்கு எதிராகத் தண்டப்பணங்களை விதிப்பதை நடைமுறைப்படுத்தவும் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

எதிர்காலத்தில் கனியவளங்கள் தேவைப்படுபவர்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பிப்பதற்கும், அதன் ஊடாகத் தேவைப்படும் மணலின் அளவு கணிக்கப்பட்டு ஒரு நாளில் எவ்வளவு மணல் விநியோகம், எந்த மார்க்கம் ஊடாக நடைபெறும் என்ற விவரங்கள் துல்லியப்படுத்தப்படுவதன் ஊடாக மணல் மாபியாக்களைக் கட்டுப்படுத்தவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ்.சிறீபவானந்தராஜா, வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் புத்திக சிறிவர்தன, யாழ்ப்பாணப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் மாறப்பன, யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமஹா, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் வடபிராந்திய முகாமையாளர் டி.மயூரன், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் இணைப்பாளர் சு.கபிலன் ஆகியோர் நேரடியாகப் பங்கேற்றனர். மேலும், மாவட்ட செயலாளர்கள் மற்றும் ஏனைய பிரதேசங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் சூம் காணொலித் தொழில்நுட்பம் ஊடாகவும் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் மலசலகூடத்தை நிர்வகிப்பதில் குழப்பம்!

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பொது மலசலகூடத்தை நிர்வகிப்பது தொடர்பில் யாழ் மாநகர சபைக்கும் இலங்கை போக்குவரத்து சபையினருக்கும் இடையே ஏற்பட்டுள்ள குழப்ப நிலை நேற்று பெரும் பிரச்சினையாக மாறியதால், யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் சில மணி நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று காலை யாழ் மாநகர சபையின் ஊழியர்கள் குறித்த மலசல கூடத்தொகுதிக்கு நீர் இணைப்பை வழங்கும் நோக்குடன் சென்றிருந்த நிலையில், அவர்கள் இலங்கை போக்குவரத்துச் சபையினரால் தடுக்கப்பட்டதை அடுத்தே பிரச்னை உருவானது.

இது குறித்து கருத்து தெரிவித்த இலங்கை போக்குவரத்து சபையினர், தமக்குரிய நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள பொது மலசலகூடத்தை நிர்வகிக்கும் விடயத்தில் யாழ்.மாநகர சபை தன்னிச்சையாக செயற்பட்டால் சேவையை முடக்கி போராடுவோம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



இவ்விடயம் குறித்து கருத்து தெரிவித்த யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள், இலங்கை போக்குவரத்துச் சபையினர் தொடர்ந்தும் இடையூறாக இருந்தால் பொலிஸாரின் உதவியுடன் சட்ட உதவியை நாடி, தாம் மலசலகூட கட்டடத்தை திறக்க நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்துள்ளனர். (அ)

# ஜேர்மன் தூதுவருடன் மனோ குழு சந்திப்பு



கொழும்பு, மார்ச் 29

மலையக தமிழரின் வீடு, வாழ்வாதார காணிக்கான உரிமை, பெருந்தோட்ட முறை மாற்றம் மூலம் தொழிலாளர், பங்காளராக மாறுவது, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி, மனித உரிமை விதிகள், தோட்டங்களில் நிலவும் நவீன அடிமைத்துவம் தொடர்பாக ஜேர்மன் தரப்புக்கு எடுத்துக் கூறிய தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் தூதுவர் கலாநிதி பீலிக்ஸ் நியூமனை, தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர் சந்தித்து உரையாடினர்.

இந்த உரையாடலில், தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசியல் குழு உறுப்பினர்கள் எஸ். சசிகுமார், பரத் அருள்சாமி, எஸ். பிரஜீவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில் மனோ தனது எக்ஸ் தளத்தில் மேலும் கூறியுள்ளதாவது-

மலையக தமிழர் என்பவர்கள் சமீபத்தைய இந்திய வம்சாவளி பின்னணியுடைய 1.5 மில்லியன் தேசிய சிறுபான்மை இனத்தவர் ஆகும்.

இவர்களை, ஒரு தொழிலாளர் பிரிவாக மட்டும் காட்ட கயமை முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. உலகம், இந்த இன அடையாளத்தை கவனத்தில் கொள்ளவேண்டும்.

உலக உதவிகள், மிகவும் நலிந்த பிரிவினரை அடைகிறதா என உறுதி செய்யப்படவேண்டும்.

ஜேர்மனியில் சிதறி வாழும் சிறுபான்மை சமூகங்களான டேன்ஸ், சோர்ப்ஸ், பிரீசியன், சிநிதி-ரோமானியர், ஆகியோர் அனுபவிக்கும் நலவுரிமைகள் பற்றி அறிய விரும்புகிறோம். அதன் மூலம், எமது அரசியலமைப்பு யோசனையான நில-சார்பற்ற சமூக சபை முன்மொழிவை மேலும் சிறப்பிக்க விரும்புகிறோம்.

ஜேர்மன் தூதுவர் மலையக மக்களின் காணி உரிமை தொடர்பில் தாம் தெளிவு கொண்டுள்ளோம் எனவும் அதை தற்போது மென்மேலும் விரிவுபடுத்திக் கொண்டதாகவும், தொடர்ந்து நமக்குள்ளே உரையாடலை தொடர விரும்புவதாகவும் தெரிவித்தார்-எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பஸ்கள் கொள்வனவு மோசடி குறித்து இலஞ்ச ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 29

100 பஸ்கள் கொள்வனவு செய்யப்பட்டதில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்துமாறு கோரி சிவில் அமைப்பு ஒன்று இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

இந்தக் கொடுக்கல் வாங்கலில் 'இலவசமாக' நான்கு பஸ்கள் கிடைத்துள்ளதாக போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன அண்மையில் வெளியிட்ட கருத்துக்களைத் தொடர்ந்தே இந்த முறைப்பாடு செய்யப்பட்டதாக பொது உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் அமைப்பாளர் நுவன் திலக்கரத்ன தெரிவித்தார்.

இலஞ்சம் பகிரங்கமாகவோ அல்லது இரகசியமாகவோ பெறப்பட்டாலும் அது தவறு என்பதால், இது குறித்து முறைப்பாடு செய்ய நாங்கள் தீர்மானித்தோம் என திலக்கரத்ன குறிப்பிட்டார்.

கொள்வனவு செயல்முறையின் வெளிப்படைத்தன்மை குறித்து கேள்வி எழுப்பிய அவர், பொது மக்களின் நிதியைப் பயன்படுத்தியே இந்த பஸ்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டினார்.

கடந்த கால கொள்வனவு நடைமுறைகளின்படி, வழங்குநர்கள் கொள்வனவு செய்யப்படும் ஒவ்வொரு 10 பஸ்களுக்கும் ஒரு மேலதிக பஸ்ஸை இலவசமாக வழங்கியுள்ளனர். ஆனால் தற்போதைய கொடுக்கல் வாங்கலில் அந்த புள்ளிவிவரங்கள் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அவர் கூறினார்.

முந்தைய நடைமுறையின் படி, 10 பஸ்களுக்கு 1 பஸ் இலவசம்.100 பஸ்களுக்கு 10 பஸ்கள் இலவசமாகக் கிடைத்திருக்கவேண்டும். ஆனால், தற்போது 4 பஸ்கள் மட்டுமே கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

அப்படியானால் ஏனைய 6 பஸ்களுக்கு என்ன நடந்தது என அவர் கேள்வி எழுப்பினார். (அ)

# பொய்களை கூறி மக்களை ஏமாற்றிவிட்டது அநுர அரசு!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 29

தற்போதைய அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அடுக்கடுக்கான பொய்களைக் கூறி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

தற்போதைய வரிக்கொள்கை மற்றும் அரசாங்கத்தின் முறையற்ற தீர்மானங்களால் மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருவதாகவும், அரசாங்கத்தினால் ஏற்படும் நட்டங்கள் அனைத்தும் மக்கள் மீதே சுமத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக, எரிபொருள் விவகாரத்தில் 45 நாள்களுக்குப் போதுமான கையிருப்பு இருப்பதாக முன்னர் கூறிவிட்டு, தற்போது உலக சந்தை விலையைவிட அதிக விலைக்கு எரிபொருளைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

முன்னைய ஆட்சியின்போது கணக்கில் ட்ரில்லியன் கணக்கில் பணம் இருப்பதாகக் கூறியவர்கள், இன்று அது குறித்துப் பேசுவதே இல்லை எனவும் அவர் விமர்சித்தார்.

அரசு உள்நாட்டு விவசாயிகளை வலுப்படுத்துவதை விடுத்து, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து நுகரும் கலாசாரத்தை அரசாங்கம் திட்டமிட்டு உருவாக்கி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதன் காரணமாகக் கிராமப்புறங்களில் உரத் தட்டுப்பாடு மற்றும் உணவுப் பாதுகாப்புத் தொடர்பான அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும், அரசாங்கம் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# பொருள்கள் பதுக்கலை தடுப்பதற்கு நாடு முழுவதும் விசேட சோதனைகள்!

கொழும்பு, மார்ச் 29

சித்திரை புத்தாண்டு மற்றும் பண்டிகைக் காலங்களில் அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்குவதைத் தடுப்பதற்காக, ஏப்ரல் 30 ஆம் திகதி வரை மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களில் விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது.

நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார இது குறித்துத் தெரிவிக்கையில்-

சந்தைக்குப் பொருட்களை விடுவிக்காமல் பதுக்கி வைத்திருப்பதைத் தடுக்க இறக்குமதியாளர்கள் மற்றும் மொத்த வியாபாரிகள் மீது நேரடி ஆய்வுகள் நடத்தப்படும்.

செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி விலையை உயர்த்த முயற்சிப்பவர்களை அடையாளம் காணக் களஞ்சிய சாலைகள் தீவிரமாக சோதிக்கப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்யும் சில்லறை விற்பனை நிலையங்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

பண்டிகைக் காலங்களில் காலாவதியான அல்லது காலாவதியாகும் தறுவாயில் உள்ள பொருள்களை மீண்டும் புதிய முறையில் பொதியிட்டு விற்பனை செய்யும் மோசடிகள் அதிகரிப்பதாக அதிகார சபை கவலை வெளியிட்டுள்ளது.

இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்டறிய விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

புத்தாண்டு காலத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் 'தள்ளுபடி விற்பனைகள்' மற்றும் 'விசேட சலுகைகள்' நுகர்வோர் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு அமைகின்றனவா என்பது குறித்தும் அதிகாரிகள் கண்காணிப்பார்கள் என நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# ஈரான் போர்ச் சூழல்நிலையால் கருவாட்டின் விலையும் உயர்வு

கொழும்பு, மார்ச் 29

சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள போர் பதற்றம் மற்றும் போக்குவரத்துத் தடைகள் காரணமாக இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரித்து வருகின்றன.

இது குறித்து அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் கணேஷ் விநாயகசுந்தரம், தற்போதைய சூழலில் விலைகளை உறுதிப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவித்தார்.

ஈரானில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக அங்கிருந்து இறக்குமதி செய்யப்படும் தரமான நெத்திலி கருவாட்டின் விலை உயர்ந்துள்ளது.

போருக்கு முன்னர் 800 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ நெத்திலி, தற்போது 1500 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. உற்பத்திச் செலவு மற்றும் விநியோகச் சிக்கல்களே இந்த விலை உயர்விற்குக் காரணம் என அவர் சுட்டிக்காட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.03.2026 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.